ஓம் கடவுள் துணை.

அஷ்டோத்திர

# திருக்குறள் போதினி

(முதலாவது அத்தியாயம்.)

இஃது

விசேஷ உரையாக எழுதியவரும்

வெளியிட்டவருமான

ஜீவகாருண்ய நண்பன்

T G ராமகிருஷ்ணய்யர்,

14, ஜடாமுனிகோவில் தெரு, மதுரை.

மதுரை

சி. எம். வி. பிரஸில் அச்சிடப்பெற்றது.

1940.

All Rights] [Reserved.

உ

ஓம்



கடவுள் துணை.

# வேண்டுகோள்.

இதில் வெளியாகும் திருக்குறள் திருவள்ளுவ நாயனார் இயற்றிய "கடவுள் வாழ்த்து" முதல் "ஊடலுவகை" வரை மொத்தம் 133 அதிகாரங்களில் அதிகாரம் 1-க்கு 10 குறள் விகிதம் எடுத்துக் காட்டியிருப்பதை மொத்தமாகக் கொண்ட புஸ்தக ரூபமாயுள்ளதானது பெரும்பாலும் மக்கள் பெரிய புஸ்தகமெனக் கருதி அதனை விரைவில் வாங்கவும், வாங்கினாலும் ஓரே நோக்கங்கொண்டு அதனைக் கற்றுணர மிகக் கடினமாகவும் தோன்றிச் சந்தர்ப்பம் வாய்க்காமலும் போகின்றது. அவ்வண்ணமாக உள்ளதைச் சிறிதாகவும் எளிதாகவும் வெளிப்படுத்தவேண்டுமென்னும் பேரவாக்கொண்டு ஒவ்வொரு பாகத்திலும் 12 குறள் விகிதம் எழுதி வெளியிடுவதில் புஸ்தக அலங்காரத்தை அனுசரித்தும், நாலாவித நியாயங்களும் ஒவ்வொரு பாகத்திலும் கலந்து தோன்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் பெரிய புஸ்தகத்தி

லுள்ளதுபோல் வரிசையை அனுசரியாமல் கற்பவர்களுக்கு ஊக்கமும் இனிமையும் தருமாறும், அறிவு வளர்ச்சிக்குச் சாதகமாகவுமுள்ள குறளை அந்தந்த அதிகாரத்திலிருந்து சமயோசிதம்போல் பொருக்கி எடுத்துக் கூடுமானவரை சிறிதாகவும் சுருக்கமாகவும், அதாவது என்னும் உபமான உரைகளுடன் எழுதி விளங்க வைக்க முன் வந்ததே இத் திருக்குறள் போதினி வெளியாவதின் நோக்கம். எனவே இருமைப் பயன்களையும் தரத்தக்க இரு சிறு அடிகளிலுள்ள பெரும் பொருளென்னும் வேத மொழிகளை,

**" கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்து**
**நல்லார் அவைஅஞ்சு வார் "**

என்ற வள்ளல் பெருமான் அமுதமொழிக் கிணங்கி மக்கள் யாவரிடையும் பரவச்செய்ய வேண்டுமென்ற ஆசையே மற்றுமொரு நோக்கம். ஜீ. ந.

N.B:— இரண்டாவது அத்தியாயம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

# திருக்குறள் செய்யுளகராதி.


| வரிசை | | பக்கம் |
|---|---|---|
| 1 | அகர முதல் | 1 |
| 2 | அன்பின் வழியது | 50 |
| 3 | அன்பிலார் எல்லாம் | 98 |
| 4 | அன்றுஅறிவா மென்னாது | 66 |
| 5 | அன்போடு இயைந்த | 86 |
| 6 | அவிசொரிந்து ஆயிரம் | 89 |
| 7 | அஃகாமை செல்வத்திற்கு | 77 |
| 8 | அறன்ஆக்கம் வேண்டாதா | 6 |
| 9 | அறன்வரையான் அல்ல | 82 |
| 10 | அற்றார் அழிபசி | 7 |
| 11 | அறத்தினூஉங்கு ஆக்கமும் | 28 |
| 12 | அறத்தாறு இதுவென | 29 |
| 13 | அறவாழி அந்தணன் | 73 |
| 14 | அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் | 104 |
| 15 | அறிவினான் ஆகுவதுண்டோ | 17 |
| 16 | அறிவின்மை இன்மையுள் | 46 |
| 17 | அல்லவை தேய | 51 |
| 18 | அழுக்கா றுடையான்கண் | 102 |
| 19 | ஆக்கமும் கேடும் | 80 |

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 20 | இகழ்ச்சியில் கெட்டாரை | 18 |
| 21 | இனிய உளவாக | 23 |
| 22 | இன்பம் விழையான் | 45 |
| 23 | இலர் பலராகிய | 31 |
| 24 | இணர்ஊழ்த்தும் நாறா | 79 |
| 25 | இருந்து ஓம்பி இல்வாழ்வ | 68 |
| 26 | இருமனப் பெண்டிரும் | 69 |
| 27 | இருள்சேர் இருவினையும் | 37 |
| 28 | இளையர் இனமுறையார் | 48 |
| 29 | ஈத்துஉவக்கும் இன்பம் | 35 |
| 30 | ஈன்றாண் முகத்தேயும் | 43 |
| 31 | ஈன்றாள் பசிகாண்பான் | 57 |
| 32 | உதவி வரைத்தன்று | 40 |
| 33 | உயிர்உடம்பின் நீக்கியார் | 64 |
| 34 | உலகத்தோடு ஒட்ட | 27 |
| 35 | உடைசெல்வம் ஊண்ஒளி | 42 |
| 36 | உருளாயம் ஓவாது | 83 |
| 37 | உள்ளுவ தெல்லாம் | 58 |
| 38 | ஊருணி நீர் | 103 |

| | | பக்கம் |
|---|---|---|
| 39 | எச்சமென்று என்எண்ணுங் | 78 |
| 40 | எனைத்தானும் எஞ்ஞான்றும் | 67 |
| 41 | என்பி லதனை | 8 |
| 42 | எல்லார்க்கும் நன்றாம் | 52 |
| 43 | எதிலார் குற்றம்போல் | 63 |
| 44 | ஐயப் படா | 38 |
| 45 | ஒருமையுள் ஆமைபோல் | 105 |
| 46 | ஒருபொழுதும் வாழ்வது | 53 |
| 47 | ஒறுத்தார்க்கு ஒருநாளை | 36 |
| 48 | ஒன்றெய்தி நூறிழக்கும் | 59 |
| 49 | ஓஒதல் வேண்டும் | 30 |
| 50 | கல்லா தவரின் | 96 |
| 51 | கடிதோச்சி மெல்ல | 88 |
| 52 | கண்ணோட்டத்து உள்ளது | 87 |
| 53 | கணைகொடிது யாழ்கோடு | 33 |
| 54 | கறுத்துஇன்னா செய்தவக் | 70 |
| 55 | கற்றதனால் ஆய | 2 |
| 56 | காலத்தினால் செய்த | 107 |
| 57 | குறிப்பின் குறிப்புஉணரா | 19 |

| | | பக்கம் |
|---|---|---|
| 58 | கையறி யாமை | 84 |
| 59 | கொடுப்பது அழுக்கறுப்பான் | 62 |
| 60 | கொன்றன்ன இன்னு | 22 |
| 61 | கோளில் பொறியில் | 85 |
| 62 | ஞாலம் கருதினும் | 16 |
| 63 | தனக்குஉவமை இல்லாதான் | 61 |
| 64 | தன்குற்றம் நீக்கிப் | 47 |
| 65 | தன்னுயிர் தானறப் | 20 |
| 66 | தன்னைத்தான் காக்கின் | 71 |
| 67 | தீயவை செய்தார் | 41 |
| 68 | தெருளாதான் மெய்ப்பொருள் | 108 |
| 69 | துன்பம் உறவரினும் | 94 |
| 70 | நட்டார்க்கு நல்ல | 81 |
| 71 | நடுவின்றி நன்பொருள் | 90 |
| 72 | நல்லார் எனப்படுவது | 74 |
| 73 | நன்றாங்கால் நல்லவாக் | 21 |
| 74 | நாச்செற்று விக்குள்மேல் | 4 |
| 75 | நாளென ஒன்றுபோல் | 14 |
| 76 | நிலத்துஇயல்பான் நீர்திரிந்து | 11 |

| | | பக்கம் |
|---|---|---|
| 77 | நிலத்திற் கிடந்தமை | 92 |
| 78 | நிலையஞ்சி நீத்தாருளெல்லாம் | 10 |
| 79 | நெடுநீர் மறவி | 15 |
| 80 | நெருநல் உளனொருவன் | 26 |
| 81 | நெருப்பினுள் துஞ்சலும் | 93 |
| 82 | நோயெல்லாம் நோய்செய்தார் | 101 |
| 83 | பகைபாவம் அச்சம் | 34 |
| 84 | பாத்து ஊண் மரிஇ | 9 |
| 85 | பணிஉடையன் இன் | 3 |
| 86 | பயனில பல்லார்முன் | 91 |
| 87 | பழியஞ்சிப் பாத்தூண் | 76 |
| 88 | பிறப்பென்னும் பேதைமை | 95 |
| 89 | பிறவிப் பெருங்கடல் | 97 |
| 90 | பெண்ணிற் பெருந்தக்க | 24 |
| 91 | பேணாது பெண்விழைவான் | 60 |
| 92 | பொருட்பெண்டிர் பொய்ம்மை | 44 |
| 93 | பொருளானும் எல்லாமென்று | 56 |
| 94 | பொறிவாயில் ஐந்தவித்தான் | 49 |
| 95 | பொறியின்மை யார்க்கும் | 106 |

| | | பக்கம் |
|---|---|---|
| 96 | புகழ்ந்தவை போற்றிச் | 32 |
| 97 | புக்கில் அமைந்தின்று | 39 |
| 98 | புறத்துஉறுப் பெல்லாம் | 65 |
| 99 | புறங்கூறி பொய்த்துஉயிர் | 5 |
| 100 | மலர்மிசை ஏகினான் | 13 |
| 101 | மழித்தலும் நீட்டலும் | 72 |
| 102 | மறப்பினும் ஒத்துக் | 54 |
| 103 | வஞ்ச மனத்தான் | 75 |
| 104 | வலியார்முன் தன்னை | 12 |
| 105 | வறியார்க்கொன்று ஈவதே | 55 |
| 106 | வித்தும்இடல் வேண்டுங் | 100 |
| 107 | வேண்டாமை யன்ன | 99 |
| 108 | வேண்டுதல் வேண்டாமை | 25 |

ஓம் கணபதி துணை.

"அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

**விரிவுரை:** — உலகில் மக்களைப் பெற்று அவர்கள் மகிழ்ந்து வாழ்வதற்கும், பற்பல விசித்திர விநோத மான வஸ்துக்களை கணக்கிலடங்கா வண்ணம் உண்டாக்கியும், அவைகளில் அவரவர்கள் விரும்பியவாறு அடைந்து அனுபவித்தல் பொருட்டு நல்லொழுக்க முறைகளை ஏற்படுத்தியும், உலகத்தை நடத்திக்கொண்டு வரும் பரம்பொருள் ஒருவரே, எழுத்துக்களில் அகர மானது முதல் எழுத்துபோல் உலகிற்கும் முதல்வ ராவர் என்பதாம்.

அதாவது — உலகம் உண்டாக்கியவரும் உலகிற்கு ஆதியான முதல்வரும் அவர் ஒருவரே என்றுணரப் பெறுகிறோம்.

"கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்"

**விரிவுரை:—** கல்விக்குக் காரண புருஷராயுள்ள பரம்பொருளான கடவுளை தினம்வணங்குதலே மக்கள் கல்வி பெற்ற பயனுகும். அஃதில்லாத மக்கள் கற்ற கல்வியினுல் என்ன பயனைத் தரும் என்பதாம்.

அதாவது—கல்வி கற்றுணர்ந்த அறிவின் மிகுதியால் தினம் கடவுளை வணங்குதலும், தன்னிலும் பெரியோர்களை அறிந்துகொள்வதும், தன்னிலும் கீழான மக்களை அறியச்செய்வதுமே கற்றவர்களின் லக்ஷணமாகும். அஃதில்லாது செல்வச்செருக்கில் வாழ்ந்த வணங்காமுடி மன்னர்போன்று கல்விச் செருக்குடன் இருந்து வாழும் சில மக்களை வெகுவாய் கண்டிப்பதாகிறது.

'பணிஉடையன் இன்சொலனாதல் ஒருவர்க்கு
அணி அல்ல மற்றுப்பிற''

**விரிவுரை:—** ஒருவன் எவரிடத்தும் தாழ்மை உடையவனாயும், வணக்கமுடையவனாயுமிருந்து இனிய சொற்களைச் சொல்லி அன்புமிகுந்து வாழ்வானாகில் அவையே அவன் அணியும் உயர்ந்த ஆபரணங்களாகும் என்பதாம்.

அதாவது—அடக்கம், ஒழுக்கம், வணக்கம் இத்தகைய குணங்கள் கொண்ட செய்கையும் நடத்தையுமே மக்கள் உயர்ந்த ஆபரணங்கள் அணிந்தவர்களாவர் என்பதைக் குறிக்கிறது.

" நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேச்சென்று செய்யப் படும் "

**விரிவுரை:**— நாவை அடக்கி பெரும் விக்கல் மேலெழுவதற்கு முன்னமேயே மோக்ஷத்துக்கு ஹேதுவாகிய நற்காரியங்களை விரைந்து செய்தல் வேண்டும் என்பதாம்.

அதாவது— மக்கள் செய்யத்தகுந்த புண்ணிய காரியங்களை வாய்தாவில் வைத்துக்கொள்ளாமலும், செய்வதற்கு ஏமார்ந்துவிடாமலும், நினைவில் வரும் சமயமே விரைவில் செய்து முடிக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

**"புறங்கூறி பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்"**

**விரிவுரை:**— ஒருவன் பிறனைக் காணாதவிடத்து இகழ்ந்து பேசியும், கண்டவிடத்து புகழ்ந்து பேசியும் உயிர்வாழ்தலைப் பார்க்கிலும் அவன் உயிரை விட்டு விடுவதே தரும நீதிப்படி நலம் என்பதாம்.

அதாவது—ஒருவருக்கொருவர் புறங்கூறி வாழ்வதே சிலர் தொழிலாகக் கொண்டுள்ளது மிகவும் தீய குண மென்பதும், ஒருவனைப்பற்றி ஒருவன் கோழ் சொல்வ வதில் கடுகளவு பிரயோஜனமும் அடையாது பின்னும் தன்னைத்தான் கெடுவதற்கே ஆகிறது. ஆகவே இதைவிட அக்கிரமமான செய்கை எதுவுமே உலகில் இல்லை என்பதையும் காட்டுகிறது.

" அறன்ஆக்கம் வேண்டாதா னென்பான்
பிறன்ஆக்கம்
பேணது அழுக் கறுப்பான் "

**விரிவுரை:**— பிறருடைய பெரும் வாழ்வைக் கண்டு பொருமைப்படும் ஒவருன் இவ்வுலகத்தில் அடையும் செல்வமும், அவ்வுலகத்தில் அடையும் தருமமும் தான் அடைவதற்கில்லாமல் வேண்டாதான் என்று எண்ணங் கொண்டவனுவான் என்பதாம்.

அதாவது— பிறர் செல்வம் கண்டு பொருமைப் படுவதைக்காட்டிலும் அவர் இவ்வளவு பெருமையுடன் வாழ்வதற்கு முன் ஜென்மத்தில் எவ்வளவு நன்மை செய்து புண்ணியம்பெற்றவனுயிருப்பானே என்பதைத் தன்னறிவால் சிந்தித்து உணர்ந்து தானும் தன்னு லியன்றளவில் நல்லவைகள் செய்யத் துணிவதே சிறந்த குணம் என்பதைக் காட்டுகிறது.

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி"**

**விரிவுரை:—** தான் பெற்ற பொருள் பந்தோபஸ்து செய்துவைக்க உறுதியான இடம், வறியவர்களின் பசியை அறிந்து அப்பசியைத் தீர்த்துவைப்பது தான், ஸ்திரமான பந்தோபஸ்துக்குரிய இரும்புப்பெட்டி களாகும். அவர்களும் தம் தம் பொருள்களைக் காப்பாற்றிக் கொண்டவர்களுமாவர் என்பதாம்.

அதாவது— தன்னிலும் கீழாக வாழும் மக்களுக்கு உதவி புரியவும், பசித்துவரும் மக்களுக்கு பசி தீர்க்கவுமே கடவுள் சிலரிடம் பொருள் கூடுதலாகக் கொடுத்து வாழச் செய்திருப்பது. இந்த உண்மை அறியாது சிலர் அதற்கு முரண்பாடாக பூமியில் புதைத்தார் போல் கட்டிவைத்துக்கொண்டிருப்ப தானது கடவுள் கட்டளை உணராதவர்களாகி, தானும் அநுபவிப்பதற்கில்லாமல் இழந்துபோகும் மக்களைச் சிந்திக்கச்செய்கிறது.

**" என்பி லதனை வெயிற்போல் காயும்**
**அன்பி லதனை அறம் "**

**விரிவுரை:—** எலும்பு இல்லாத ஜந்துக்களான புழு பூச்சிகள் சூரிய வெப்பத்தால் சுடப்பட்டு வருந்துதல் போல, அன்புடன் வாழாத மக்கள் தருமதேவதையால் வருந்துவார்கள் என்பதாம்.

அதாவது—உலகில் மக்கள் அன்பு மிகுதியால் அடைந்துள்ள அறிவால் பிற மக்களிடமும் அன்பு பாராட்டிக்கொள்ளுதலே மானிட ஜென்மத்தின் இயல்பான குணமாகவும், மற்ற பிராணிகளை விட ஓர் அறிவு அதிகமாகக் கடவுளால் தந்தருளி உள்ளதின் உண்மை அறியாது வாழ்ந்திடும் சில மக்களைச் சுட்டிக் காட்டியதுபோலாகிறது.

" பாத்தூ ணூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது "

விரிவுரை.— பிறருக்கு இட்டு உண்ணுவதும் பிறருடன் பகுத்து உண்ணுவதுமாக பழகிய ஒருவனுக்கு தீய பசி என்னும் நோய் எக்காலத்திலும் (தீண்டாது) வந்து அணுகாது என்பதாம்.

அதாவது—ஞானத்துக்கும் ஆச்சாரத்துக்கும் பொருந்தியுள்ளது, தனிப்பட சாப்பிடுவது அழகல்லவென்றும் "உண்டிற்கழகு விருந்தோடுண்டல்" என்னும் மூத்த தாய் நீதி வாக்கியப்படி பிறரையும் வைத்துக்கொண்டு உண்பதுதான் உத்தமர்களின் உண்மை உணவாகுமென்றும், அத்தகைய வழக்கம் கொண்டுள்ள மக்களுக்கு பசி என்னும் வறுமையே எக்காலத்திலும் நேரிடுவதிற்கில்லை என்பதையும் விரித்துக்காட்டுகிறது.

" நிலைஅஞ்சி நீத்தாருளெல்லாம் கொலை அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை "

**விரி**வுரை:—பிறப்பு நிலையின் இன்ப துன்பமறிந்து இனி பிறவாமைப்பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்த துறவியை விட, கொலை பாவத்திற்குப்பயந்து கொல்லாமையாகிய (அறத்தை) தருமத்தைக் கைக் கொண்டவனே, அத்துறவியைவிட உயர்ந்தவனுவான் என்பதாம்.

அதாவது—மக்கள் எவ்வித சத் கைங்கர்யங்கள் செய்திடினும் அனைத்தும் கொல்லாமையாகிய விரதத்திற்கு கீழ்பட்டவைகளேயாகிறது என்பதும், புலாலுண்ணுமை என்னும் கொல்லா விரதமே உலகில் சிறந்து விளங்கும் உயர்ந்த விரதமென்பதும், இவ்விரதம் கைக்கொள்ளாத மக்கள் மற்ற எவ்வித விரதத்தாலும் பயன் படமாட்டார்கள் என்பதையும் காட்டுகிறது

" நிலத்துஇயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்து இயல்பதாகும் அறிவு "

**விரிவுரை:**—*ஆகாயத்திலே தனித்திருந்த அமிர்தம் போன்ற நீருக்கு நிலத்தில் வந்து சேர்ந்தவிடத்து நிறம் சுவை முதலான குணங்கள் மாறுதல்போல, தனிமையான பரிசுத்த மானிட அறிவுக்கு தாம் சேர்ந்து திரிகிற பிற இனத்தின் இயல்பால் வேறுபட்டு அவ்வினத்தினது தன்மைபோல் ஆகிறது என்பதாம்.*

*அதாவது—மக்கள் சேர்ந்து திரியும் நண்பர்களின் குணதோஷத்தால் தன் தன் அறிவு உயர்வு தாழ்வு ஆகிக்கொண்டிருக்கிறதென்றும், ஆகவே "சேரிடம் அறிந்து சேர்" என்னும் நீதி வாக்கியத்தையும் இங்கு மக்களுக்கு எடுத்துக் காட்டுவது போலாகிறது.*

"வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்
மெலியார் மேல் செல்லுமிடத்து"

**விரிவுரை:—** தன்னிலும் மெலியவர்களைத் துன்பப் படுத்தும் ஒருவன் தன்னிலும் வலியவர்கள் தன்னைத் துன்பப்படுத்தியதை நினைக்கக்கடவன் என்பதாம்.

அதாவது—இன்பமும் துன்பமும் உலக மக்கள் யாவருமே அனுபவிக்கும் இயற்கையாகையால், தன்னிலும் மெலியவர்களைத் துன்பப்படுத்துவது தானே தனக்குத்துன்பம் தேடிக்கொண்டது போலும். அவர்களை இன்பப்படுத்துவதும் தனக்கு இன்பத்தைத் தானே தேடிக்கொண்டதுபோலும். இதுவே உலக மயக்கத்தினின்று நீங்கிய தன்மையாகுமென்பது புலனாகிறது.

ஓம் கணபதி துணை.

**" மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார் "**

விரிவுரை:— மக்களது நெஞ்சில் தாமரை மலர் போன்று வீற்றிருக்கும் கடவுளை இடைவிடாது நினைப்பவர், எல்லா உலகங்களிலும் மேலான மோட்ச உலகத்தில் அழிவில்லாமல் வாழ்வர் என்பதாம்.

அதாவது — மக்களின் ஆடல் பாடல்கள் அனைவற்றிர்க்கும் கர்த்தாவாகயிருந்து அவைகளை க்ஷணே க்ஷணே நோக்கிக்கொண்டு மக்களின் இருதயத்தில் காவல் புரிந்து வருவதால், மக்கள் நன்மை தீமை யறிந்து அக்கடவுளின் சிந்தனையிலேயே இருந்து வாழ வேண்டும் என்பதைக்காட்டுகிறது.

**" நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின் "**

**விரிவுரை:—** நாளென்பது ஒரு வாள் போன்றும், அவ்வாளின் வாயில் அகப்பட்டிருக்கிறது இந்த உடல் என்பதையும், அறிவாளர் நன்குணர வேண்டும்.

அதாவது— (உயிரானது நாள் என்று சொல்லப் படும் கால அளவின் பேரில்) மரத்தை அறுக்கும் ரம்பத்தின் வாயில் அகப்பட்ட மரக்கட்டை போன்று, மக்களின் உடல்; நாள் என்னும் கால அளவில் இடைவிடாது அறுபட்டுக் கொண்டிருப்பதை ஜாக்கிரதைப் படுத்துவதாகிறது.

**" நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் "**

**விரிவுரை:**— சோம்பலும், தாமதமும், மறதியும், மிகுந்த நித்திரையுமாகிய இந்நான்கும் இயல்பெனக் கொண்டவர்கள் கெடுவதற்க்கெனவே விரும்பி ஏறும் மாக்கலங்கள் என்பதாம்.

அதாவது— கடலைத் தாண்டக் கூடாத சாதாரண சிறு மரக்கலங்களை விரும்பி ஏறிச் செல்வதாயின் மத்தியில் ஆபத்து நிச்சயம் என்பது போல மானிட வாழ்க்கையில் இந்நான்கு குணங்கள் துன்பத்திலே வீழ்த்தும் என்பதின் நிச்சயத்தைக் காட்டுகிறது.

**“ ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின் ”**

**விரிவுரை:—** *காலமறிந்து பிறமக்களின் நலத்தைக் கருதி, நன்மைக்குக் காரணமாயுள்ள தொழிலோ, வியாபாரமோ செய்யும் ஒருவன், உலகம் முழுவதையும் அடைய விரும்பினாலும், அதைத் தவறாது அடைந்தே தீருவான் என்பதாம்.*

*அதாவது— பிறருக்குப் பிரயோசனம் கொடுக்காத தொழில் முறையில் ஒருவன் எவ்வித சம்பத்துடன் வாழ்ந்திடினும் அது பிரகாசமில்லாத செல்வம் போலத் தோன்றும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.*

**" அறிவினுன் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தந்நோய் போல் போற்ருக்கடை "**

**விரிவுரை.**— *பிற உயிர்க்கு வந்த துன்பத்தைத் தன் உயிர்க்கு வந்தாற் போல நினையாத மக்கள் அறிவினுல் என்ன பயன் பெற்றவர்களாவர் என்பதாம்.*

*அதாவது— பிற உயிரை தன்னுயிர் போல் நினைப்பது ஏன்? என்பதைச் சிந்திக்காத மக்கள் பலர் உளர். உயிர்கள் அனைத்தும் ஈஸ்வர அணுக்கள் என்றும், உடல்கள் அவரவர்கள் செய்த பாவ புண்ணியத்திற்குத் தகுந்த படி வெவ்வேறு விதமாக அடையப் பெற்றிருப்பதும், ஒரு உயிரை துன்பப்படுத்திஞல் அது கொண்டுள்ள உடலை பங்கப்படுத்தியதுமல்லாமல் அதிலுள்ள உயிரான ஈஸ்வர வடிவத்தையும் நிந்தித்தவர்களாகிருர்கள். ஆகவே அப்பெரும் தப்பிதத்திஞல் மக்கள் அத்தகைய பாவத்திற்கு ஆசைப்பட்டவர்களாகிருர்கள். எனவே அறிவிஞல் இத்தகைய உண்மைகளை அறியாத மக்களை கண்டிப்பதாகிறது.*

**" இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தான்தம்**
**மகிழ்ச்சியில் மைந்துறும் போழ்து "**

**விரிவுரை:—** செல்வத்தினால் பெரு மகிழ்ச்சி அடைந்துத் தாம் செருக்குடன் வாழும்பொழுது, முற் காலத்தில் செல்வச் செருக்கினால் மறதி அடைந்து (அதனால்) கெட்டவர்களை நினைக்கக்கடவர் என்பதாம்.

அதாவது— மக்கள் யாவரும் தாம் தாம் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் மறதி என்னும் மயக் கத்தால் மோசம் போகிறார்களென்றும், அதனால் அத் தகையவர்களுக்குப் பின் வந்து அணுகும் பெறும் மாறு தல்களும், கெடுதல்களும் எடுத்துக் காட்டுகிறது.

**"குறிப்பின் குறிப்புஉணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்"**

**விரிவுரை:—** *குறித்ததை குறிப்பால் அறிய, காக்ஷியாக அடைந்துள்ள இரு கண்களைக் கொண்டும் பிறர் குறிப்பை அறிய மாட்டாதவனாயின், அப்பேர்பட்டவனின் அவயவங்களுள் உண்டாயுள்ள கண்கள் என்ன பயன் செய்யவோ என்பதாம்.*

*அதாவது— காசு மடியில் வைத்திருந்தும் பசிக்கு யாசிப்பதின் தன்மை போல, நன்மை தீமை அறிய இருகண்களிருந்தும் பயன் படுத்திக் கொள்ளாத மக்களின் லக்ஷணத்தை விளக்கிக் காட்டுகிறது.*

**" தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாம் தொழும் "**

**விரிவுரை:**—தன் உயிர் அடையத்தகும் உறுதியைப் பெற்ற ஒருவனை, இதர எல்லா உயிர்களும் கண்டு வணங்கும் என்பதாம்.

அதாவது— நாம் யார் என்பதை உணர்ந்து நிலையிலும், உறுதியிலும், சத்தியத்திலும், வாழும் ஒருவனைக் கண்டு பிற எல்லா மக்களும், பிற எல்லா ஜந்துக்களும், கண்டு வணங்கி நிற்கும் என்பதை விளக்கிக் காட்டுகிறது.

**"நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லற் படுவ தேவன்"**

**விரிவுரை:—** உலகில் வாழும் மக்கள் நல் வினைப் பயனுகிய இன்பத்தை மகிழ்ச்சியுடன் அனுபவித்து ஆனந்தமடைவது போலவே, தீ வினைப் பயனுகிய துன்பங்களையும் வெறுப்பு கொள்ளாமல் பொறுமையுடன் அனுபவிக்காத மக்கள் அறிவுடையவர்களாக மாட்டார்கள் என்பதாம்.

அதாவது— இன்பமும் துன்பமும் சமமாகக் கொள்வதே உத்தம வாழ்க்கையின் லக்ஷியமாகு மென்பதும் அன்னியில் 'அழவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் நஞ்சு' என்பதர்க்கிணங்க, தனக்கென்று ஜாஸ்தியாக கிடைத்தது அமிர்தம் போன்றுள்ளதாயினும், தானே கொள்வது சாத்தியப்படாமற் போவது போல, தான் அனுபவிக்கும் இன்பத்தை பிறருக்கும் பங்கிட்டுக் கொடுத்து வாழும் மக்களுக்கு துன்பம் என்னும் நோய் வந்து அணுகாது விலகி நிற்கும் என்பதைக் காட்டுகிறது.

“ கொன்றன்ன இன்னு செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும் ”

**விரிவுரை:—** தமக்கு முன் ஒரு நன்மை செய்தவர், பின் அவரே வெறுக்கப்படும் தீமைகளைச் செய்தாராயினும், அவர் செய்த அந்நன்மை ஒன்றையே நினைத்து மற்றைய தீமைகளெல்லாம் மறந்து விடுக என்பதாம்.

அதாவது—நன்மை, தீமை இரண்டும் வந்தடைவது மக்களுக்கு இயல்பாவது போல, பிறரால் அடையும் இவ்விரண்டிற்கும் தம் வினைப்பயன் என்று கொண்டு பொறுமை காட்டிக் கொள்வதே மக்களின் உயர்ந்த தன்மை என்பதைக் காட்டுகிறது.

**" இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய் கவர்ந்தற்று "**

**விரிவுரை:—** புண்ணியர்தரும் இனிய சொற்களிருக்க பாவமுண்டாகும் கடுஞ் சொற்களை பிறருக்கு சொல்லுவதானது, மரத்தில் பழுத்த பழமிருக்க அதைத் தின்னாமல் இனிமை இல்லாத காய்களைப் பறித்துத் தின்னும் தன்மை போலாகும் என்பதாம்.

அதாவது— இனிய சொற்களென்பது அமிர்தம் போன்ற கனிகள்கொள்வது போலும், கடுஞ்சொற்கள் என்பது நஞ்சாகவுள்ள எட்டிக்காய்கள் கொள்வது போலும், ஆகவே கடுஞ்சொற்கள் மக்கள் உபயோகிப்பதில் ஏற்படும் குற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

**"பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"**

**விரிவுரை:—** *உலகில் மக்கள் பெறுவதற்குரிய பல உயர்ந்த பொருள்கள் உண்டாயிருப்பினும், கற்புடைய மனைவியை ஒருவன் அடைவதை விட வேறு உத்தம மான பொருள் எதுவுமே இல்லை என்பதாம்.*

*அதாவது— கற்புடைய மனையாள் வசிக்கும் இல்லத்தில் உயர்ந்த பொருள்கள் யாவும் தாமாகவே வந்து அடையுமென்றும், இதர உயர்ந்த பொருள்கள் யாவும் பெரும்பாலும் உத்தமமான மனைவியாலேயே அடைய முடிகிறது என்பதால், கற்புடைய மனைவியை விட உயர்ந்தது வேறு ஒன்றுமே இல்லை என்பதை விளக்கிக் காட்டுகிறது.*

ஓம் கணபதி துணை.

## வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்—
## தார்க்கு
## யாண்டும் இடும்பை இல

**விரிவுரை:—** விரும்புதலும் வெறுத்தலுமற்ற நிறந்தரமான கடவுளைச்சேர நினைந்திருக்கிறவர்களுக்கு எக்காலத்திலும் பிறவித் துன்பம் வந்து அடைவதில்லை என்பதாம்.

அதாவது— மண்ணில் பிறந்து முடிவில் இறந்து போவதே மக்கள் அடைந்து வரும் பிறவித் துன்பமென்றும், இதினின்றும் உயர்ந்த பதவியை அடைவதற்கு இம்மானிடப் பிறவியே தகுந்த பிறவியாகுமென்பதும், இத்தகைய பக்குவமான பிறவியிலும் உத்தமமானவற்றை அடையாது இழந்துவிடின் மறுபிறவியில் எத்தகைய ஜென்மம் அடைவோமோ எதைப் பெறுவோமோ என்பதையும் நினைக்கப்படுவதால், கைதனில் கிடைத்துள்ள அமிர்தத்தைக் கீழே சிந்தவிடாது தன் வாயிற்கொண்டு ருசியை அடைந்தார் போல உத்தமமான இப்பிறவியிலேயே தெளிவு படுத்திக்கொள்ளுமாறு மக்களுக்குப் போதனை செய்வதாகிறது.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு**

**விரிவுரை:**— இவ்வுலகம் நேற்று உயிருடனிருந்தவன் இன்று உயிரை இழந்து இறந்தான் என்னும் பெருமை கொண்டுள்ளதாயிருக்கிறது என்பதாம்.

அதாவது — செல்வம் பெற்றவனுக்குச் செல்வத்தால் ஓர் பெருமை போன்றும், கல்வி கற்றவனுக்குக் கல்வியால் ஓர் பெருமை போன்றும், உலகில் மக்களாய்ப் பிறந்தும், பெறும் பாலோர் நிலையாக வாழ்வதறியாது ஏமார்ந்து போவதே இயல்பாகக் கொண்டிருப்பதை உலகமும் ஓர் பெருமை கொள்வதாகிறது. ஆகவே மக்கள் கடவுள் தந்தருளிய அறிவால் நிலையுள்ளவற்றை அடைந்து நிலையில் வாழவந்ததேயாகும் என்பதும், அளிதில்லாது பேராசை என்னும் மயக்கத்தால் மறந்து மோசம் போகிற மக்கள் தம் உயர்ந்த பிறவியை வீணுக்கிக் கொள்வதாக ஏற்படுகிறதை எடுத்துக் காட்டுகிறது.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்**

**விரிவுரை:—** உலகத்தாரோடு பொருந்த நடத்தலைக் கல்லாதவர் பலவேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றவராயிருப்பினும் பயன் படாத விவேக மில்லாதவரே ஆவர் என்பதாம்.

அதாவது— பொருந்தி நடத்தல் என்பது நமது முன்னோர்களின் உயர்வான நடத்தையில் பொருந்தி நடந்து கொள்வதும், இக்காலத்துக்கு ஏற்காதவைகளை விட்டு ஏற்குபவைகளைத் தழுவி நடத்தலும், கல்விக்கு பயன் அறிவும் அறிவுக்கு பயன் ஒழுக்கமும் அவவொழுக்கத்தை கல்லாதவர், பல கற்றும் கல்லாதவரென்று ஏற்படுவதால் அடக்கம் ஒழுக்கம் கற்று நடத்தலே அறிவுடையோரது லக்ஷணமென்றும் அஃதில்லாதவர்களின் தன்மை பெருமை தராத அவலக்ஷணமேயென்பதைக் காட்டுகிறது.

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலி னூங்குஇல்லை கேடு**

**விரிவுரை:—** *தருமத்தின் மேற்பட்ட செல்வமே யில்லை. அத்தருமத்தைச் செய்வதினின்று மறந்து விடின் அதைவிட வேறு கேடும் இல்லை என்பதாம்.*

*அதாவது— உலகில் மக்களாய்ப் பிறந்துள்ளதின் நோக்கம் தன்னிலும் கீழாக உள்ளவர்களைத் தன் அளவில் வாழச்செய்வதும் தன்னிலும் மேலாக உள்ளவர்களுடன் கலந்து அவர்களின் உயர்வுக்குத் தானும்சேர முயற்சிப்பதேயாகும். இதற்கு முரண்பாடாக வாழ்பவர்கள் உலக உண்மையை மறந்து உலகில் கேடு சம்பாதிக்கவே அவதரித்தவர்களாய் மனிதத் தன்மையையும் கெடுத்துக் கொண்டவர்களாவர் என்பதைக் காட்டுகிறது.*

**அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை**

**விரிவுரை:—** தருமம் செய்தலின் பயன் பல்லக்கி லேறி செல்லுபவனிடத்தும் அத்தருமம் செய்யாமை யால் வந்த கெடுதல் அப்பல்லக்கைத் தூக்கிச் செல்பவ னிடத்தும் காட்சி அளவில் கண்டு அறியலாமே என் பதாம்.

அதாவது — பணக்காரன் என்றும் ஏழை என்றும் கோழை என்றும் கடவுள் சிருஷ்டியில் பிரிவினை கிடை யாது. இந்த ஜென்மத்தில் நற்காரியத்தில் ஈடுபட்ட வன் மறு ஜென்மத்தில் கோடீஸ்வரனுக்குப் பிள்ளை யாய்ப் பிறந்து இன்பம் அநுபவிப்பான். அன்றி இந்த ஜென்மத்தில் தீய காரியங்களில் ஈடுபட்டவன் மறு ஜென்மத்தில் காட்டில் விறகு வெட்டி ஜீவிப்பவனுக்கு பிள்ளையாகப்பிறந்து துன்பம் அநுபவிப்பான். எனவே மக்கள் செய்யும் நன்மை தீமையை அனுசரித்து அவ ரவர்கள் மறு ஜென்மத்தில் அநுபவிக்க வேண்டிய தைத் தாமாகவே தேடிக்கொள்வதாக ஏற்படுவதால் மக்கள் செய்யும் கருமத்தையே பின் ஜென்மத்தில் அநுபவிக்கிறார்களென்பதின் உறுதியை நிலை நிறுத்துவ தாகிறது.

**ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**யாஅதும் என்னு மவர்**

**விரிவுரை:—** தாம் உயர்வாக சிறப்போடு வாழ விரும்பினல் பிற மக்களின் கெடுதலுக்குக் காரணமாயுள்ள தொழிலோ வியாபாரமோ செய்யாது விடக் கடவர் என்பதாம்.

அதாவது— உலக மக்களால் நன்கு மதிக்கப்பட்டு பிறமக்களுக்கு பலன்தரக்கூடிய விதத்தில் தொழில் முறைகளை நடத்திக் கொண்டு வருபவர்களே உலகில் மேலான பதவியுடனும் கீர்த்தியுடனும் தவறாது வாழ்வர் என்பதும், அத்தகைய விதத்தில் வந்தடைந்த செல்வமே தமக்குப் பின்னும் தலைமுறை தலைமுறையாக தம்மக்கள் அநுபவிக்க உதவுமென்பதையும், உலக மக்களின் ஆசியே ஒருவன் உயர்விலும் தாழ்விலும் வந்து அடைகிறான், என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

## இலர்பல ராகிய காரணம் நோற்பார்
## சிலர்பலர் நோலா தவர்

**விரிவுரை:**— உலகில் பாக்கியவான்கள் சிலரும் நிர் பாக்கியவான்கள் பலருமாக இருந்து வாழ்வதற்கு காரணம் முன் ஜென்மத்தில் நன்மை செய்தவர்கள சிலராகவும் தீமை செய்தவர்கள் பலராகவும் இருந்த தாலேயே என்பதாம்.

அதாவது — பூர்வம் அவனவன் செய்யவேண்டிய சத்கருமங்களைச் செய்யாது மறந்தவர்களாயும், நம்பிக் கை யில்லாதவர்களாயும், நம்பிச் செய்தவர்களையும் தூஷித்தவர்களா யிருந்திருப்பின், அத்தகையவர்கள் இந்த ஜென்மத்தில் வறுமைப்பட்டவர்களாய் வாழ்வ தும், சத் கருமங்களை பரிபூரணமாய் நம்பி அவற்றைத் தவறாது செய்தவர்களும் தம்முன்னோர்களின் அனுஷ் டானத்தை ஆதரித்துத் தன்னிலும் மேலானவர்களைப் பணிந்து நடந்தவர்களுமான மக்கள் பாக்யவான்களாக வும் விளங்குகிறார்களென்பதைக் காட்டுகிறது.

## புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
## இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்

**விரிவுரை:—** மக்கள் மேலானவற்றை எண்ணி எண்ணி இடை விடாது செய்யக் கடவர். அவ்வாறு செய்யாது மறந்தவர்க்கு ஏழு பிறப்பிலும் நன்மை அடைய முடியாது என்பதாம்.

அதாவது—மனுநீதிப்படிக்கும் வேத நூல் சாஸ்திரப் படிக்கும் மக்கள் அடையத் தகுந்தவைகளை அடைதல் பொருட்டு காலம் தவராது செய்தல் வேண்டுமென்பதும் உத்தியோகம் வகித்த ஒருவன் எவ்விதம் அதிகாரம் செலுத்த கடமைப்பட்டவனாகிறானோ, அதுபோல் மக்களாய் பிறந்து வந்தவர்கள் தம் தம் கடமையைச் செய்யாது மறந்துவிடின் மானிடப்பதவிக்கே அருகராற்றவர்களாகி பின் ஏழுபிறப்பிலும் அவர்கள் நரகதுக்கமே தேடிக் கொண்டவர்களாவர் என்பதைக் காட்டுகிறது.

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்**

**விரிவுரை:—** அம்பு வடிவத்தில் நேர்மையாயிருப்பினும் செயலினால் கொடியதாகவும், வீணை வடிவினாலே வளைந்திருப்பினும் செயலினால் இனிமை தரக் கூடியதாகவுமிருப்பது போன்று, துறவிகளென்றும் ஞானிகளென்றும் வெறும் உருவால் மதித்து விடாமல் நடத்தையால் அவர்களை அறியவேண்டும் என்பதாம்.

அதாவது—உண்மைத் துறவியோ, ஞானியோ என்று அவர்களின் தோற்றத்தாலும் சொற்களாலும் மட்டுமேயன்றி அவர்களுடன் கூடி பழகி அவர்களின் நல்லொழுக்கம், நற்சிந்தனை, நற்செய்கை முதலிய சிறந்த குணங்களால் அவர்களை அறியவேண்டுமென்பதைக் காட்டுகிறது.

**பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**
**இகவாவாம் இல்இறப்பான் கண்**

**விரிவுரை:—** பிறன் மனைவியை விரும்பிச் செல்பவனிடம் பகை, பழி, பாவம், அச்சம் இந் நான்கு தீய குற்றங்களும் விட்டு நீங்காது குடி கொண்டிருக்கும் என்பதாம்.

அதாவது—பிறன் மனைவியைத் தன் சகோதரியாக நினைக்காது கேடு நினைப்பவன் அறிவில்லாத்தனமாய் பழி பாவத்திற்கு ஆசைப்பட்டவனாகி இருமைப் பயன்களையும் இழந்து தன் ஜென்மத்தையே பாழாக்கிக் கொள்வதுடன் இளம் பிராயத்திலேயே படத்தகாத வேதனைகளுடன் உயிரை இழந்து விடவும் ஏற்படுவதை சிந்திக்கச் செய்கிறது.

## ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல்—
## தாமுடைமை
## வைத்துஇழக்கும் வன்க ணவர்

**விரிவுரை:—** பொருளைத்தேடி அதைக்காத்திருந்து செலவழியாது வைத்திருந்து வீணாக இழந்து போக வாழும் மக்கள் பிறருக்கு அப்பொருளைக் கொடுத்து அதனால் அநுபவித்தவர்களின் இன்பத்தை அவர்கள் அறியமாட்டார்களோ என்பதாம்.

அதாவது—பிறருக்குத் தன்னாலான அளவில் உபகாரம் செய்து அவர்களின் துன்பத்தை நீக்குவதானது தனக்கு இன்பமாக வந்தடையுமென்பதும் வறியவர்களின் துன்பத்தை குறைக்கக் குறைக்க தனக்கு இன்பம் மென்மேலும் கூடி வருமென்பதும் "இறைத்த கிணறு ஊறும்" என்பதற்கிணங்க இறைத்து ஊறும் ஜலம் தெளிவும் சுத்தமும் அடைவதுபோல பிறர்க்குப் பயன்படுமாறு கொடுத்து உதவும் செல்வத்திற்கு வளர்ச்சியும் அருள் பிரகாசமும் உண்டாகும் என்பதைக் காட்டுகிறது.

**ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொருத்—
தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்**

**விரிவுரை:—** ஒருவர் அறிவீனத்தால் தீங்கை செய்ததை நினைத்துப் பதிலுக்குப் பதிலாக தண்டித்தவனுக்கு ஒரு நாளை இன்பமேயாகும். அன்றி அதை பொறுத்தவருக்கு உலகம் உள்ள அளவும் புகழ் உண்டாகும் என்பதாம்.

அதாவது—மக்கள் அறிவீனத்தாலும் தெரியாத்தனத்தாலும் செய்யும் செய்கையே குற்றமெனப்படும். எனவே அவ்வித மக்கள் செய்த குற்றத்தைப் பொருட்படுத்தாது மன்னித்து அவர்களை உயர்த்தி விடுவதே அறிவாளிகளின் லக்ஷணமாகும். அத்தகையவர்களே என்றும் அழியாப் புகழ் பெற்று வாழ்வர். அவவிதமின்றி பொறுமைகொள்ளாது அவர்களைக் குற்றம் நோக்கி தண்டிப்பதில் அடையும் பயன் ஒரு நாளை இன்பமே ஆகும் என்பதைக் குறிக்கிறது.

ஓம் கணபதி துணை.

# இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

**விரிவுரை:**—கடவுளுடைய உண்மையான புகழை விரும்பினவர்களிடம் அஞ்ஞான மயக்கத்தால் ஏற்பட்ட நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் (சேராது) உண்டாகாவாம் என்பதாம்.

அதாவது—பரிசுத்த தன்மையுடன் வாழ்வதற்கு உரிமையுடையவர்களாகிய மக்கள் உலக உண்மை அறியாது, பெரும் மயக்கத்தில் ஈடுபட்டு, நல்வினை தீவினை என்னும் பாசக்கயிற்றால் கட்டுண்டு அதினின்றும் தப்புவதற்கு இயலாது, குணங்களற்றவை குணங்கள் உடையனென மனப்பான்மையைக் கொண்டு, மதிமோசம்போகிறார்கள். அவ்விதமில்லாது கடவுளின் திருவடியே மெய் என்பதை அறிந்து, நல்வினை தீவினைக்கு ஆளாகாது கடவுளின் கிருபாகடாக்ஷத்துக்கு ஆளாக மக்களைத் தூண்டுவதாகிறது.

**ஐயப் படா அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோ டொப்பக் கொளல்**

**விரிவுரை:**— *பிறருடைய மனத்திலே நிகழ்வதைச் சந்தேகப்படாமல் அறிய வல்லவன் மனிதனே ஆயினும் அவன் தெய்வத்தோடு சமானமாக நன்கு மதிக்கக் கடவன் என்பதாம்.*

*அதாவது—பிறர் எண்ணுவதை ஒருவன் அறிந்து கொள்வது ஓர் அபூர்வ சக்தி எனப்படுவதால் அது தெய்வத்தன்மை போன்றும் அத்தகைய குறிப்பு உணரும் மக்கள் பார்வைக்குச் சாதாரண மனிதர்களாகத் தோன்றினும் அவர்களை உலகில் நடமாடும் தேவர்களென்று நினைத்தலே சிறப்பு என்பதும் (எனவே) அவ்வித குணங்களுடைய மக்களது அறிவுப்பிரகாசத்தின் பெருமையையும் உயர்வையும் எடுத்துக் காட்டுகிறது.*

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு**

**விரிவுரை:**— உடலுள்ளே ஒதுக்கக் குடியிருந்து வரும் உயிர் தனக்கு என்றைக்கும் நிலையாக இருக்க வீடு இதுவரையும் அமையவில்லையே என்று பரிதவிக்கிறது என்பதாம்.

அதாவது—மக்களின் உடம்பு உயிருக்கு ஓர் வீடாகவும் ஆனால் மக்கள் நிலையில் வாழ்வதில்லாமல் இருப்பதால், இஃது நோய் வாய்ப்பட்ட உடம்பு என்பதும் சொந்த வீடு இல்லாதவன் குடைக்கூலிப் பிடித்து வாழ்வதுபோல் மக்களது உடம்பு நிலைபெறுதிருப்பதால் இவ்வுடம்புகள் உயிருக்கு உரியன அல்ல வென்பதும் (எனவே) உறுதியற்ற இவவுடம்பின் சிறுபான்மையை அறிந்து நிலையானதைப் பெறுவதின் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.

உதவி வரைத்தன்று உதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து

**விரிவுரை:**—மக்களுக்குச் செய்யும் உதவிக்கு அள வில்லை ஆனல் அவ்வுதவியை அடைந்தோரின் மனப் பூர்வமான மகிழ்ச்சியினளவே அளவாகும் என்பதாம்.

அதாவது— ஒருவர் பிறருக்குச் செய்யும் உதவி சிறிதெனினும் பெரிதெனினும் அவ்வுதவியை நாடி அடைந்தபோது அதனல் ஏற்பட்ட நன்மையைப் பொறுத்து அதனை அடைந்தவரின் பரம திருப்தியின் அளவே பலனகும் என்பதும் எனவே மக்கள் செய் யும் உதவியானது அவரவர்களின் திருப்திக்கு ஏதுவாக இருத்தல் வேண்டுமென்பதை விளக்கிக் காட்டுகிறது.

**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று**

**விரிவுரை:**—தன் நிழலானது நெடுந்தூரம் சென்றும் தன் அடியிலேயே தங்கி வருதல்போல மக்கள் செய்யும் தீவினைகளும் தன்னோடு தங்கியிருக்கும் என்பதாம்.

அதாவது—தன் நிழல் தன்னைவிட்டு நீங்காதிருப்பது போல், மக்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் தீவினைகள், இப்பிறப்பிலோ அல்லது மறுபிறப்பிலோ அவற்றைத் தான் அனுபவித்துத் தீரும்வரைக்கும், தன்னைவிட்டு நீங்காமலே இருந்துவரும். எனவே தீவினை என்னும் தீய குற்றத்தில் மக்கள் ஈடுபடாது பகுத்தறிவால் சிந்தித்துணர்ந்து தீயில்விழுந்து வீணே சாகும் வெட்டிப்பூச்சிபோலில்லாமல் நல்வினையை அடையுமாறு வாழ மக்களை உபதேசிப்பதாகிறது.

**உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்**

**விரிவுரை:**—சூதினை விளையாட்டுத் தொழிலாக விரும்பும் மக்களுக்குக் கீர்த்தியும், கல்வியும்,செல்வமும், ஊணும், உடையும் வந்து சேராவாம் என்பதாம்.

அதாவது—சூதாட்டமென்பது மக்களுக்குச் சிறுமை பல செய்து, அவைகளால் இருமைப் பயன்களையும் கெடுக்க வல்லதாகி, தம் கீர்த்திக்கும் அவகேடு ஏற்படுத்தி, சகல பாக்கியமும் தம்மைவிட்டு நீங்கச்செய்து, மக்கள் மதிகெட்டுத் திரியவும் நேரிடும். எனவே இத் தகைய சூதை விரும்பினவர்கள் தாம்அடையத் தகுந்த கீர்த்தி, கல்வி, பொருள், உண்ண உணவு, உடுக்கத் துணி முதலியவற்றிற்கும் வழியில்லாது கஷ்டப்படுபவர்களாவர் என்பதைக் குறிப்பிடுகிறது.

நன்றாண் முகத்தேயும் இன்னாதுஆதலால்
என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

**விரிவுரை:**—எவ்வகையிலும் அன்பு கொண்டுள்ள தன் தாயும் தன் மக்கள் கள்ளுண்டு களித்தலைப்பார்த்து வெறுப்பாள். எனின், பிற மக்கள்முன் கள்ளுண்டு வாழ்வதில் என்ன பயன் பெற்றவர்களாவர் என்பதாம்.

அதாவது—எத்தகைய குற்றத்தையும் மன்னித்து மகிழும் தன் தாய்க்கே கள்ளுண்டு வாழ்வது ஏற்காத அற்ப காரியமாயிருக்க, மரியாதைக்கும் பெருமைக்கும் அழிவு தரத்தக்கதான கள்ளை மக்கள் விரும்பிகொள்வது தன் அறிவைக் கெடுத்துக்கொண்டு தன்னிலும் சிறியோர் பெரியோர்களிடம் அவமானப்பட்டு வாழ்தலே ஆகும் என்பதைக் காட்டுகிறது.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்
—டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று

**விரிவுரை:**—பொருளை விரும்பும் வேசையர்களின் பொய்யான புணர்ச்சியானது இருண்ட வீட்டில் அயலான் பிணத்தைத் தழுவினாற்போலாகும் என்பதாம்.

அதாவது—ஜாதியும் பருவமும் ஒவ்வாது கூடும் வேசையர்களை விரும்பும் மக்களின் லக்ஷணம் (எது போல் எனின்) கூலிக்குப் பிணம் எடுப்பவா காணக் கூடாத ஓர் இருட்டு அறையில் சென்று சம்பந்தமில்லாத ஒரு பிணத்தைக் கூலியின்றித் தூக்குவதற்கு ஒப்பாகும் என்பதால் அத்தகைய நடத்தையுள்ளவர்களின் அறியாமையை எடுத்துக்காட்டுகிறது.

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்**

**விரிவுரை:** — *தான் இன்பத்தை விரும்பாதவனுகிக் காரணமாயுள்ள முயற்சியே விரும்புவோன் தன் உறவினர் துன்பத்தைத் தாங்கி நிற்கும் தூண் என்பதாம்.*

*அதாவது—தான் அநுபவிக்கும் இன்பத்தைவிட பிறத்தியார் அநுபவிக்கும் இன்பத்தையே பெரிதெனக் கருதி காரியமாகிய இன்பத்தை விரும்பாமல் காரணமாகிய முயற்சியை விரும்புவோன் எல்லாப் பயன்களையும் அடைவானென்பதுந்தவிர அத்தகைய முயற்சியுள்ள மக்கள் தம் உறவினர்களின் துன்பத்தையும் தாங்கி நிற்கும் தூணுக்குச் சமானமானவர் என்பதைக் குறிக்கிறது.*

**அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு**

**விரிவுரை:**—மக்களிடம் இல்லையே என்பதற்குத் தன்னுள்ளிருக்கும் அறிவுக்குப் பிரகாசமில்லையே என்பதேயாம். அறிவுடையவர்கள் இல்லையே என்பற்கு அழிந்துபோகும் இதர பொருளைக் குறித்து இல்லாமையாகக் கொள்ளமாட்டார்கள் என்பதாம்.

அதாவது—மக்கள் விரும்பிப் பெறவேண்டியது தன் அறிவுக்கு அருட்பிரகாசமென்பதும் அழியும் பொருளால் பெறமுடியாத எதையும் அறிவுப்பிரகாசத்தால் இலகுவில் அடைந்துவிடலாமென்றும் எனவே அழிவுள்ள ஆசைப் பொருளைக்கொண்டு நம் முன்னிலேயே அழிந்துபோகும் வஸ்துக்களைத் தான் அடைய முடியுமென்பதும், ஆனால் கடவுள் தந்தருளிய அறிவு என்னும் பொருளைக்கொண்டு தான் இறுதியில் தன்னுடன் கொண்டு செல்லத்தக்கதான அழிவில்லா உயர்ந்த வஸ்துக்களையே அடைய முடியுமென்பதால் அறிவுப் பொருளே உயர்ந்தோர்கள் விரும்பும் உண்மைச் செல்வமென்பதைக் காட்டுகிறது.

**தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு**

**விரிவுரை:**—மக்கள் தம் குற்றத்தை முதலில் நீக்கிக் கொண்டு பிறர் குற்றத்தைப் பின்னுல் காண்பவல்லவராயின் அத்தகையவருக்கு குற்றமே நேரிடாது என்பதாம்.

அதாவது—தன் நடத்தையிலோ செய்கையிலோ சொல்லிலோ சரியில்லாது எல்லாவிதத்திலும் வேறுபட்டு வாழும் சிலமக்கள், தம் குற்றத்தையறியாது பிறரின் குற்றத்தையே அவர்கள் எடுத்துக் காட்டுவதானது, அறிவு குன்றியவர்களென்பதும், முதலில் தாம் நேர்மையாக இருந்துகொண்டு பிறரின் நேர்மையை கவனிப்பதுதான் மானிடத் தன்மையாகுமென்பதும், அத்தகைய மக்களிடம் எவ்வித குற்றமும் வந்து அடையாது என்பதையும் விளக்கிக்காட்டுகிறது.

**இளையர் இனமுறையார் என்றிகழார் நின்ற**
**ஒளியோடு ஒழுகப் படும்**

**விரிவுரை:**— உத்தியோகம் வகித்துவரும் ஒருவர் தன் எஜமானரைத் தேவனாகவும் தான் மனிதனாகவும் நினைத்து ஒழுகுதல் வேண்டுமேயல்லாது தன்னிலும் இளமை யென்றும் தனக்கு முறைமை யென்றும் பாராட்டி இகழ்ந்து நடந்துகொள்ளும் மக்கள் உத்தியோகத்துறையின் உண்மை அறியாதவர்களாவர் என்பதாம்.

அதாவது—உத்தியோகஸ்தர் எஜமானரைத் தன் தகப்பன் போன்றும் அவரின் லாபத்தில் தான் ஒரு பங்காளிபோன்றுமிருந்து நடந்துகொள்ளலும் அதே போன்று எஜமானரும் உத்தியோகஸ்தரைத் தன் பிள்ளையாகவேப் பாவித்து அவரின் ஏழ்மையை நீக்கி கௌரவப்படுத்திவைத்தலே தம் கடமையாகக்கொண்டு நடப்பதாக இருந்தால் அத்தகைய ஒருமனப்பட்டவா களால்நடக்கும் வரவுசெலவு வியாபாரமோ தொழிலோ மிஞ்சிய பயன் தரத்தக்கதாகும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகம் இல்லை என்பதை விளக்கிக் காட்டுகிறது.

ஓம் கணபதி துணை.

## "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் வொழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்"

**விரிவுரை:**— மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து வழிகளில் உண்டாகும் ஐந்தாசைகளையும் அறுத்தவனது மெய்யான ஒழுக்கவழியிலே வழுவாது நின்று ஒழுகுபவர்கள் பிறப்பில்லாமல எக்காலத்திலும் ஒரே தன்மையாக நீடுழி வாழ்வார்கள் என்புதாம்.

அதாவது—பஞ்சேந்திரியங்களால் ஏற்படும் மயக்கத் தன்மையான ஆசைகளை நீக்கி கருணைமூர்த்தியான கடவுளின் சிந்தனையே கதியாகவும், அவரின் கிருபா கடாக்ஷமே குறியாகவும், அஃதே நேர்மையான வழியெனவும் கொண்டு உள்ளம் உருகி வழிபடுபவர்களே மோக்ஷத்துக்குரியவர்கள். அஃதில்லா மக்கள் மயக்கத்தில் சிக்கித் திணறிக் கொண்டிருப்பவர்களே என்பதைக் காட்டுகிறது.

" அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு "

**விரிவுரை:**— அன்போடு பொருந்திய உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பு யில்லாத உடம்பு உயி ரற்ற உடம்பேயாகும் என்பதாம்.

அதாவது—அன்பின் வடிவால் அடையப் பெற்ற இம்மானிட வுடலானது பிற மக்களிடம் அன்பு பாராட் டிக் கொள்ளுதலும், இல்லற தருமத்தின் சாரம் ஒரு வரை ஒருவர் சகோதர வாஞ்சையால் அன்புமிகுந்து ஒழுகுதலே யென்பதும், அஃதில்லா மக்களின் உடம்பு யாதொரு பயனுமின்றி வெறும் எலும்பினாலும் தோலி னாலும் போர்த்துக்கொண்டுள்ள கூடு போலாகும் என் பதைக் காட்டுகிறது.

" அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் "

**விரிவுரை:**— ஒருவன் இனிய சொற்களையே ஆராய்ந்து உபயோகிப்பானாகில் அவனது பாவம் தேயத் தேயப் புண்ணியம் வளரும் என்பதாம்.

அதாவது—ஒருவன் கடினமாகவும் வெறுப்பு தரக் கூடிய வகையிலும் சொற்களை உபயோகிப்பது தரும மற்ற செயலாகு மென்பதும், அச்சொற்களால் பகை யாகிய பாவம் வளர்ந்துகொண்டே யிருக்குமாதலால் அதனைச்சிந்தித்து உணர்ந்து நன்மையைத்தரும் இனிய சொற்களையே உபயோகித்துப் பாவத்திற்கு ஆளாகாமலும் பிறரின் பகையில்லாமலும் வாழ்வதற்கு மக்களுக்கு உபதேசிக்கிறது.

" எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து "

**விரிவுரை:**—*அடக்கமும் ஒழுக்கமும் எல்லா மக்களுக்கு நன்மையைத்தரும். அதனிலும் செல்வர்களாக இருப்பவர்களுக்கு வேறொரு செல்வமாயும் தோன்றும் என்பதாம்.*

*அதாவது— அடக்கமும் ஒழுக்கமும் கொண்டுள்ள நடத்தையானது பெரும்பாலும் கல்வியிலோ செல்வத்திலோ குறைவுள்ள மக்கள் நடந்துகொள்ளும் ஒரு நடத்தையாகக்காண்கிறோம். அவ்விதமின்றி கல்வியும் செல்வமும் மிகக்கொண்டுள்ள மக்களும்பெருமைப்பாடுடனில்லாது சிறுமை தாழ்மை யென நினைக்காமல் எவரிடமும் பணிந்து நடக்கும் தன்மையில் இருப்பார்களேயானால் அத்தகையவர்கள் வேறொரு உயர்ந்த செல்வமும் அடைந்து வாழ்பவர்கள் போலாகுமென்பதையும் விளக்கிக்காட்டுகிறது.*

## "ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியுமல்ல பல"

**விரிவுரை:**—ஒரு நாள்பொழுதும் தம் உடம்பும் உயிரும் கூடியிருக்கும் வகையில் பெருந்தன்மையுடன் வாழ்வதை அறியமாட்டாதவர்கள் கோடிக்கு மேலாக எண்ணி எண்ணி காலம் கழிக்கிறார்களே என்பதாம்.

அதாவது—ஒரு நாள் அளவும் தம் உடலுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தத்தின் தன்மையை யறிந்து, அன்பு மிகுந்து வாழ மாட்டாமலும் மக்கள் உலகில் வாழ்ந்து அடையவேண்டியது அன்பின் வடிவான அருட் செல்வமே என்பதைச்சிந்திக்காமலும் பேராசையால் தன்னுடன் கொண்டு செல்லத் தகாதவைகள் கோடி கோடியாக எண்ணியும் காலம் வீணே கழித்துக் கொண்டு தாம் அடைந்த ஜென்மத்தின் பயனைச் சிறிதும் விரும்பி அடையாது தாம் பெரும் நஷ்டத்தையே விளைவித்துக் கொள்வதாகிறது.

**மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும்.**

**விரிவுரை:**—உயர்ந்த குலத்தில் பிறந்துள்ளவர்கள் தம் தம் வேத சாஸ்திரங்கள் முதலியவற்றை மறந்துவிடினும் பின் கற்றுக்கொளலாகும். ஆனால் அவரவர்களின் ஆசார அனுஷ்டானங்கள் குறைந்தால் இழி குலத்தோர் ஆவர் என்பதாம்.

அதாவது—அவரவர்களுக்குரிய நீதி நூல்களைக் கற்றுணர்வதில் மறந்துவிடினும் பின் எக்காலத்திலும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்களின் வாணாசிரம தாம கொள்கைகளையும் தம் முன்னோர்களின் நியம அனுஷ்டானங்களையும் செய்வதை மறந்துவிடின் ஆசாரம் குன்றி அத்தகையவர்கள் வினைப்பயனால் அடைந்து வந்துள்ள இழி குலத்தோரின் பிறவியில் போய் சேருவார்கள். எனவே தம் தம் ஆசார அனுஷ்டானங்களை மறந்தோ நம்பிக்கையற்றோ தூஷித்தோ வாழும் மக்கள் இழி குலத்தோர் ஆவர் என்பதை விளக்கிக்காட்டுகிறது.

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"**

**விரிவுரை:**—ஒரு பொருளுமில்லாத தரித்திருக்குக் கொடுத்தலே கொடையாகும். மற்றவர்களுக்குக் கொடுத்தல் பின் பயனோடு வாங்கிக்கொள்ளலாம என்னும் குணத்தை உடையதாகும் என்பதாம்.

அதாவது - இல்லாத மக்களுக்குக் கொடுத்து உதவுவதுதான் தருமமாகும். மற்றைய - மக்களுக்குக் கொடுப்பது அவசியமில்லாத காரணத்தால் பின் தம் அவசியத்துக்கு உதவுமென்னும் பயனை நோக்கிச் செய்தது போலாகிறதால் அத்தகைய கொடுத்தல் தருமமாகாது. அஃது கொடுக்கல் வாங்கல் என்னும் தன்மையைப் பொருத்ததாயவிடுமென்பதால் இல்லாத மக்களைத் தெரிந்து பயன் எதிர்பாராது கொடுத்து அவர்களைத் திருப்தி செய்துவைப்பதே தருமத்தின் லக்ஷியமாகுமென்பதை விளக்கிக்காட்டுகிறது.

**"பொருளானும் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானும் மாணாப் பிறப்பு"**

**விரிவுரை:—** பொருளைச் சம்பாதித்து யாவர்க்கும் கொடாமலே வைத்திருப்பவன் பிறவித் துன்பத்திலேயே வந்து அடைந்து கொண்டிருப்பான் என்பதாம்.

அதாவது—பொருள் ஒன்றினாலேயே யாவும் உண்டாகுமென்று அதனைச் சம்பாதித்து பிறர் பசிக்கும் கொடுத்து உதவாது உலோபத்துவம் செய்யும் மயக்கத்தினாலும், பிறர் பசியைக் கண்டு கவனியாத பாவத்தினாலும், அத்தகைய மக்கள் இந்த ஜென்மத்திலேயே தண்டனை அடையாவிடினும் மறுஜென்மத்தில் பசித்து வருந்தும் பிறப்பில் வந்தடைவார்கள் என்பதைக் காட்டுகிறது.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

**விரிவுரை:—** *பெற்ற தாயின் பசியைத் தீர்த்து வைக்கப் பிள்ளை கடமைப்பட்டவனாக இருப்பினும் ஊரார் பழிக்கும் தொழிலாலோ பிறமக்களை மயக்கி காசுகளைப் பறித்திடும் காரியங்களாலோ சம்பாதித்து அவர்களின் பசியைத் தீர்க்கத் துணியாதே என்பதாம்.*

*அதாவது—வயது முதிர்ந்த பெற்றோரின் குறைகளைக் கவனித்து அவர்களைத் திருப்தி செய்து வைப்பது தம் மக்கட் கடமை என்றாலும் நியாயமான வழியில் சம்பாதித்து அவர்களைக் காப்பாற்றுதலே உண்மையான தாகும். அஃதில்லாது வயிறு நிறப்புவதே கடமையாகக் கொண்டு பிறரின் பழிக்கும் பாவத்துக்கும் காரணமாயுள்ள தொழிலாலோ காரியத்தாலோ சேர்க்கும் பொருள் பெரும் மோசமான தாகுமென்பதை விளக்கிக் காட்டுகிறது.*

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

**விரிவுரை:**—மக்கள் நினைப்ப தெல்லாம் உயர்வில் நினைப்பதாகவே இருக்கவேண்டும். அவ்வுயர்ச்சி கூடா விடினும் அந்நினைப்பே ஒரு பெருமையான குண முடையதாகும் என்பதாம்.

அதாவது—மக்கள் தீவிரமாக நினைத்துச்செய்யும் யாதொரு காரியமும் சற்று விரைவிலோ தாமதத்திலோ முடியத் தகுந்தவைகள்தான் என்பதும், அவ்விதம் முடியத்தகும் காரியங்களை ஆண்மையுடன் உயர்ந்த நினைவில் செய்துமுடிக்க விரும்புவது மக்களுக்கு உயர்வான குணமாகுமென்பதும், எக்காரியத்திலும் மனதில் சற்றேனும் சோர்வில்லாமல் எதையும் தாழ்வாகவும் சிறிதாகவும் கொள்ளாமல் மேன்மை யாகவே நினைத்து முடிப்பதே மக்களின் உயர்வான தன்மையாகும் என்பதை விளக்கிக் காட்டுகிறது.

" ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்
கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு "

**விரிவுரை:**—ஒன்றைப்பெற்று இன்னமும் பெறுவோ மென்ற கருத்தால் தன்னிடத்துள்ள நூற்றினையும் இழந்து வறியவராக்கும் சூதாட்டமுடையவர்க்கு நன்மை பெற்று உலகில் வாழுவதற்கு ஒரு வழி உண்டாமோ என்பதாம்.

அதாவது—சூதாட்ட மென்பது ஒரு மயக்கத்தன மான விளையாட்டாகவும் முதலில் ஒன்றிரண்டு கிடைக் கும்போல் தோன்றி மதி மோசம் போய் பின்னும் கிடைக்குமென்னும் மனப்பான்மையைக்கொண்டு தன்னிடமுள்ளதையும் இழந்து வறுமைப்படத்தக்க தாய் முடியுமென்பதால் அவ்வித துஷ்டத்தனமான ஆட்டம் மக்களைக் கெடுக்கும் ஓர் பேராசை யென்பதும் அப்பேராசையானது பெரும் பள்ளத்தாக்கில் காலை விடச்செய்து தன்னையே விழுங்குவது போலாகு மென்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

"பேணது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும்"

**விரிவுரை:—** *தன் ஆண்மை நினையாது மனையாளது பெண்மையை விரும்பும் மக்களுக்குப் பெரிய ஒரு நாணம் உண்டாக்குதலைக்கொடுக்கும் என்பதாம்.*

*அதாவது—எக்காரியத்திலும் தன் மனைவியைச் சேர்ந்து ஒழுகுகிறவர்களுக்குத் தன் செல்வத்தால் பெருமை அடையாது நாணப்பட்டு வாழ்வதாகுமென்பதும் ஆண்மையுடன் செய்யத் தகுந்த புண்ணிய காரியங்கள் பெரும்பாலும் மனையாளது யோசனையால் தடையாகுவதே இயல்பாகித் தன் செல்வத்தால் கொடுத்தல் அநுபவித்தல் இல்லாமல் வலிமை குறைந்து போவதாக இருப்பதால் பெண் தன்மையை விரும்பி வாழும் மக்களின் குறைவை எடுத்துக்காட்டுகிறது.*

## " தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்-தார்க் கல்லால்
## மனக்கவலை மாற்றல் அரிது "

**விரிவுரை—** யாவர்க்கும் நிகரில்லாது விளங்கும் பரம்பொருளான கடவுளை நினைந்து ஒழுகாதவர் களுக்கு நெஞ்சிலே தோன்றுகிற துன்பமென்னும் கவலைகள் நீக்கிக்கொள்ள இயலாது என்பதாம்.

அதாவது— இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரண புருஷராக விளங்கும் கடவுளை நினைந்து ஆக்கப்படு வதும், காற்கப்படுவதும், அழிக்கப்படுவதுமான அனை வற்றிற்கும் அவரே என்றுணர்ந்த மக்களுக்குத் துன்ப மென்னும் கவலை நெருங்காமலிருக்கும். அவ்வித மின்றி மயக்கமென்னும் குணத்தால் கடவுளது உண்மையை சிந்தித்துணராது என்னால் சேர்க்கப் பட்டவை, என்னால் கட்டப்பட்டவை, என்னால் கொடுக் கப்பட்டவை என்னும் அகங்கார தோஷகுணமுள்ள மக்களுக்கு இன்பமென்னும் சாத்மீக புருஷார்த்தம் வந்துகூடாது கவலையிலேயே அவர்களை சிக்கவைத் துக்கொண்டிருக்குமென்பதை விளக்கிக்காட்டுகிறது.

**“ கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்-
பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் ”**

**விரிவுரை**— *பிறருக்குக் கொடுப்பதைக் குறித்துப் பொறாமைப்படும் ஒருவன் உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் கெடுவான் என்பதாம்.*

*அதாவது —மக்கள் பூர்வ புண்ணியத்தால் அடைந்த நற்செல்வத்தைப் பிறர் உபகாரத்தின் பொருட்டு வழங்குவது அவர்களின் உயர்வை எடுத்துக்காட்டும். அவ்வித உயர்வான எண்ணத்தில் வாழும் மக்களைச் சிலர்கண்டு பொறாமை கொள்வதும் அவர்களின் கொடுத்தலைப் பார்த்து சகிக்காது வாழும் மக்கள் அத்தகைய தீய பொறாமையால் (தமக்கு) உலகில் வாழ இடமின்றிக் கட்டத்துணியும், உண்ணச் சோறுமில்லாது வறுமைப் படுவதல்லாது தம் சுற்றத்தாருக்கும் இழிவை உண்டாக்கிவைப்பர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.*

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னு முயிர்க்கு"

**விரிவுரை**— பிறரின் குற்றத்தைப் போல் தன் குற்றத்தையும் ஆராய்ந்து பார்ப்பானுகில் தன் உயிருக்குத் துன்பமே நேரிடாது என்பதாம்.

அதாவது— சாதாரணமாக உலகில் வாழும் பெரும் பாலான மக்கள் பிறரின் குற்றத்தைச் சொல்வதையும் எடுத்துக் காட்டுவதையுமே மேற் கொண்டுள்ளது கெட்ட குணமென்பதும், பிறரின் குற்றம் தெரிந்தாலும் அக்ஷணமே தன்னையே தான் நினைந்து தான் எவ்விதமென்றுணர்ந்துகொண்டால் அதைக் கிஞ்சித் தேனும் பொருட்படுத்தாது தன்னையே முதலில் ஒழுங்கு படுத்திக்கொள்ள சிந்திக்கச் செய்வதாகி பிறத்தியாரின் குற்றத்தைக்காணவோ, அதைக் காது கொடுத்துக் கேட்கவோ வெறுப்புற்று பரிசுத்தமாக வாழ்ந்திடலாம். எனவே பிறரின் குற்றத்தை எடுத்துக்காட்டுவதே தனக்கு ஒரு தொழிலாகக்கொண்டுள்ளவர்களின் அறியாத்தனத்தைக் கண்டனம் செய்வதாகிறது.

**" உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்-
உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர் "**

**விரிவுரை**— *வறுமையும் பிணியும் உடையவரை முற்பிறப்பில் கொலை செய்தவரென்று அறிஞர் கூறுவர் என்பதாம்.*

*அதாவது— பிற உயிர்களைச் சற்றேனும் சிந்தியாமல் அவற்றின் உடம்பைக் கொலை செய்து உயிரை நீக்கிய கொலைப்பாதகத்தால் அத்தகைய கொலையாளிகள் இப்பிறவியில் இழிவுத்தொழிலால் வறுமையோடு கூடிய வாழ்க்கையுடையவர்களாகவும் பார்க்கக்கூடாத பெரும் வியாதி என்னும் நோயுடம்பு கொண்டுள்ளவர்களாகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே பிற உயிரைக் கொல்வோரும் கொல்வதற்குக் காரணமாக இருப்பவர்களும் இப்பிறவியைப் பாழாக்கிக்கொள்வதோடு மறு பிறவிக்கும் துன்பத்தையும் வறுமையையும் தேடிக் கொண்டவர்களன்றி இம்மானிடப் பிறவியையே உதைத்துத்தள்ளினவர்கள் ஆவர் என்பதை விளக்கிக் காட்டுகிறது.*

" புறத்துஉறுப் பெல்லாம் எவன்செய்யும்-
யாக்கை
யகத்துஉறுப்பு அன்பி லவர்க்கு "

விரிவுரை— உள்ளன்பு இல்லாதார்க்குப் பிற அங்கத்தால் என்ன பிரயோஜனம் தரும் என்பதாம்.

அதாவது— இடம், பொருள், ஏவல் என்னும் புறத்து உறுப்புக்களெல்லாம் அன்பாகிய துணையோடு கூடாதிருப்பின் அவ்வித அங்கங்களினால் எவ்வித பிரயோஜனமுமில்லை யெனப்படுவதால், மக்களின் சரீரத்திற்கு அலங்காரமாகத் தோன்றுவது அன்பு என்னும் தோற்றமேயாகிறது. எனவே அன்பு இல்லா மக்களின் பிற அங்கங்களால் எவ்வித நன்மையும் அடைவதற்கில்லாமல் தோற்றத்திலும் அலங்காரத்திலும் மானிடசரீரமாக மட்டும் தோன்றி மறைந்தவர்களேயாவர் என்பதை விளக்கிக் காட்டுகிறது.

**"அன்றுஅறிவா மென்னது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை"**

**விரிவுரை—** இறக்குங்காலம் வரும்போது தருமம் செய்வோமென்றிராமல் நினைவு இருக்கும் காலத்திலேயே தருமங்களைச் செய்க. அத்தருமம் தான் இறந்து தன்னுயிர் போகுங்காலத்தில் அவ்வுயிருக்கு அழியாத் துணையாகும் என்பதாம்.

அதாவது— உலகில் பெரும்பாலான மக்கள் நற்காரியங்களைச் செய்வதற்குக் காலம் வேறு உண்டென்றும் அவைகளுக்காக பெரும் பொருள் வேண்டுமென்றும் எண்ணி எதையும் செய்யாது காலத்தை வீணே இழந்தும் போகிறார்கள். எத்தகைய நற்காரியமும், எச்சமயத்திலும் யாவரும் தவராது அன்பு கொண்டு செய்வதே உயர்ந்த அளவாகிறதால், அன்புடன் செய்யும் கடுகளவு காரியத்திலும் மலையளவு பலனுடையதாக ஏற்படுவதால் அவரவர்களின் சக்திக்குத் தகுந்தபடி அன்பு என்னும் பெரும் பொருளைக் கொண்டு அவ்வப்போது செய்து முடிப்பவர்களே உலகில் ஜாக்கிரதைப்பட்டு வாழுபவர்கள். இறுதியில் மக்கள் இறந்து உயிர் போகுங்காலத்தில் கூட வருவது நல்வினை, தீவினை என்னும் இரண்டேயாகும். ஆகவே

**"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்-
தானும்
மாணு செய்யாமை தலை"**

**விரிவுரை—** யாவருக்கும் எக்காலத்தும் எவ்வளவு சிறிதும் எத்தகைய துன்பமும் செய்யாதிருத்தலே தருமத்தில் முதன்மையான தருமம் என்பதாம்.

அதாவது— (தருமம் என்பது) பிடி பிடியாக ஓயாது அரிசி இடுவதையும், அசராது காசுகள் கொடுப்பதையும்விட பிறமக்களுக்குத் தம்மால் எக்காரணத்தாலும் எவ்வித இடையூறும் நேரிடாதபடி காப்பாற்றிக் கொள்ளுதலே சிறந்த தருமமாகும். ஒருவகையில் தருமமும் மருவகையில் அதருமமும் சம்பாதிப்பதாயின் அது நிஷ்பிரயோஜனப்பட்டு தருமம் பலவற்றில் அதருமம் சில புகுந்து கெடுத்து நாசமடையச் செய்வதாக இருப்பதால் சிறு அளவேனும் பிறருக்குத் துன்பம் செய்யாதிருப்பதே உத்தமமான தருமம் என்பதை விளக்கிக்காட்டுகிறது.

---

முன்பக்கத் தொடர்ச்சி

மக்கள் அறியாத்தனத்தால் தீவினை அடையாது ஜாக்கிரதையுடன் நல்வினையைச் சம்பாதித்துத் துணைக் கொள்ள மக்களை எடுத்துச்சொல்லுவதாகிறது.

**" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்து-ஓம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு "**

**விரிவுரை**— இல்வாழ்க்கையில் வாழ்வதெல்லாம் தன் இல்லம் தேடி வரும் விருந்தினரை உபசரித்துக் காப்பாற்றுதல் பொருட்டே என்பதாம்.

*அதாவது— இல்லற தருமத்தின் இயற்கையே பிறரை உபசரிப்பது. எனவே உபகாரத்தன்மையுடன் வாழ்வதற்கே கடவுளால் மக்களுக்கு பிறவியுடன் கூடத்தந்தருளிய பொருளெனப்படும் அறிவு. இவ்வுயர்ந்த அறிவினால் யான் எனது என்னும் செருக்கை நீக்கிக்கொண்டு வாழ்தலே உசிதமென்றும் அவ்வாறின்றி அவன் வேறு நான் வேறு அது என்னுடையது இது எனக்கே சொந்தம் என்றெல்லாம் வாழ்வது கடவுளின் அனுக்கிரகத்தை நிராகரித்தவர்களாகி கடவுளின் அபராதத்திற்குள்ளாகிறார்கள். மக்கள் கொண்டுசெல்லத்தக்கவைகளைச் சொந்தமாகப் பாவிக்காமல் மறந்து வைத்துவிட்டுப் போகக்கூடிய அற்பமானவைகளுக்காகவே சொந்தம் பாராட்டிக் கொண்டு உண்மையை மறந்து ஏமாந்து போகும் மக்களை எடுத்துக்காட்டுகிறது.*

" இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு "

**விரிவுரை—** உயிரைக் கொல்லும் வேசையர்களும் அறிவை நாசப்படுத்தும் கள்ளும் புகழை புறக்கணிக்கும் சூதும் ஆகிய இம் மூன்றும் இலக்ஷ்மி தேவியின் கிருபா கடாக்ஷம் மறந்து வாழும் மக்களுக்கு நட்பாகும் என்பதாம்.

அதாவது—ஒருவனையும் நிச்சயமில்லாது அவனோ இவனோ என்னும் பல எண்ணங் கொண்டுள்ள வேசையர்களை விரும்புதலும், தாய் தந்தை என்றும் அறியாது மயக்கத்தன்மையில் வாய் உளரச் செய்யும் போதையான வஸ்துக்களை உட்கொள்வதும், தன் மனைவியின் உயர்ந்த ஆபரணமான தாலியையும்கூட வைத்து விளையாடச் செய்யும் சூதாட்டமும் ஆகிய மூன்று தீயகுணங்களில் ஒன்றையேனும் கொண்டு வாழுபவர்கள் திருமகளான இலக்ஷ்மிதேவியின் கிருபையை மறந்து நரகத்தில் போய் அடைய மார்க்கம் தேடிக்கொண்டவர்களேயாவர் என்பதை விளக்கிக்காட்டுகிறது.

**" கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்து-இன்னா**

**செய்யாமை மாசற்றார் கோள் "**

**விரிவுரை**— ஒருவன் தனக்குத் துன்பங்களைச் செய்தாலும் அவனுக்கு தான் துன்பங்களைச் செய்யாது விட்டு விடுவதே அறிவுடையோரின் கொள்கை என்பதாம்.

அதாவது— பிறர் தமக்குச் செய்த துன்பத்துக்குப் பதிலாக துன்பமே செய்துவிட நினையாது, எக்காரணத்தால் அவர் தமக்குத் துன்பம் செய்திருக்கக்கூடும்? தம்மிடம் யாதொரு குற்றமுமில்லாதிருப்பின் தமக்குக் குற்றம் வந்தடைவதர்க்கில்லையே, தம் மேல் குற்றம் உண்டாவதற்கும் இல்லாமல் போவதற்கும் காரண புருஷராயுள்ள கடவுள் ஒருவரிருக்க இக்குற்றமும் அவர் அறியாது எம்மிடம் வந்ததல்ல என்பதும் முன்னம் அறியாமையால் பிறருக்குச் செய்த தீங்கின் நிமித்தியமாக கடவுளால் அனுப்பபட்டிருக்கும் தண்டனையே இது ஆகுமென்று சிந்தித்து உணர்ந்து சும்மா இருந்து விடுவதே அறிவுள்ள மக்களின் இயல்பான குணமென்பதை விளக்கிக்காட்டுகிறது.

**“ தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் ”**

விரிவுரை—தன்னையே தான் காப்பாறிக்கொள்ள விரும்பும் மக்கள் தம்முள்ளிருக்கும் கோபத்தைத் தள்ளிவிடுக. அக்கோபம் தன்னையே துன்பப்படுத்திக் கொண்டிருக்கும் என்பதாம்.

அதாவது—உயர்வான தன்மையில் வாழவிருக்கும் மக்களின் அபேக்ஷை கோபத்தை அடக்கிக் கொண்டு வாழுவதேயாகும். இனிய சொற்களாலும் கருணை நிறைந்த உபசரணையாலும் ஒருவன் உத்தம புருஷனாக உலகில் விளங்கலா மென்பதும் அஃதில்லாது கடுஞ் சொற்களால் மிகுந்த பாபச் செயல்களே வளர்வதாகி தன் உயிருக்கும் கஷ்டம் விளைவிப்பதாக ஏற்படுவதால் அவற்றை நீக்கிக்கொண்டு வாழுவதே சிறந்த வாழ்வு என்பதைக் காட்டுகிறது.

**" மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்**

**பழித்தது ஒழித்து விடின் "**

**விரிவுரை—** உயர்ந்தோரால் குற்றமென்று சொல்லப்பட்டவைகளை நீக்கிவிட்டால் தவத்தோருக்கு தலைமயிரை மொட்டையடித்துக்கொள்ளலோ சடைவளர்த்திக்கொள்ளலோ வேண்டாமே என்பதாம்.

அதாவது— தவத்தோர் என்பது இல்வாழ்வைத் துறந்த ஞானிகளாவர். அத்தகையவர்கள் உலக உத்தமர்களால் குற்றமென்று கருதப்பட்டவைகளை வெறுத்து அவற்றை நீக்கிவிட்டு எத்தகைய பழிபாவச் செயலிலும் ஈடுபடாது இருந்துவிடின் அதுவே பெருந்தவத்தோரின் லக்ஷியமாகும். அத்தகையவர்களுக்கு தலையை மொட்டை அடித்துக்கொள்ளலும் சடைவளர்த்திக் கொள்ளலும், காவிவஸ்திரம் கட்டிக் கொள்ளலும் போன்ற வேஷம் வேண்டாமென்பதால் அத்தகைய வேஷம் பூண்டவர்கள் வேஷத்துக்குத் தகுந்தபடி இல்லாது அதற்கு முறண்பாடாக இருந்து கெட்டுப்போகும் சிலரால் இவ்வேஷம் என்னதேவை என்பதின் சிறப்புக் குறைவை எடுத்துக் காட்டுகிறது.

ஓம் கணபதி துணை.

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

**விரிவுரை:—** கடவுளின் அடியைச் சேராதார்க்குத் தருமக் கடலைக்கடத்தல் இயலாது என்பதாம்.

அதாவது:— அறம் பொருள் இன்பமென்னும் மூன்றனுள் அறங்களனைத்தும் கடவுளின் வடிவாக இருப்பதினுல் அத்தருமக்கடலெனும் கடவுளின் அடியாகிய மாக்கலத்தைச் சேர்ந்து ஒழுகாதவர்கள் கரை காணுது அக்கடலுள்ளே அழுந்துவார்களேயன்றி கடந்து செல்லுதல் முடியாது. எனவே கடவுளை அடைய சகலவித தருமத்தையும் கொண்டொழுக வேண்டுமென்பதும் அவற்றிற்கு பொருளும் இன்பமும் அடுத்து நின்று வழிகாட்டியாக்கிக் கொள்ளல் வேண்டுமென்பதையும் மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறது.

**நல்லார் எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி**

**விரிவுரை:—** ஒருவரை நல்லவழியில் செல்லு பவரென்று சொல்லவேண்டுமாயின் யாதொரு உயிரை யும் கொல்லாவிரதம் பூண்டவராக இருத்தல் வேண்டும் என்பதாம்.

அதாவது:— உலகில் வாழும் மக்களில் நல்லவர் காருண்யமுடையவர் என்று ஒருவரைக்குறிப்பிட வேண்டுமாயின் தம்மைப்போல் பிற ஜந்துக்களும் உயிர் தரித்துவந்துள்ளதின் கடவுளது லீலாவிநோதத்தை யும் பல்வேறு ஜீவராசிகள் வித்தியாசமான பற்பல உடம்புகளைக்கொண்டு படைக்கப்பட்டு வந்திருப்பதின் காரிய காரணமும் சிந்தித்துணர்ந்து அவ்வுயிர்களை அகாரணமாய் கொலைசெய்து அதனால் ஏற்படும் கடவுள் தண்டனையை ஆராய்ந்தறிந்து எவ்வுயிரையும் எக் காரணத்தாலும் கொல்லா விரதம் பூண்ட ஒருவரே நல்வழியில் உலகில் வாழ்பவரென்றும், 'கொல்லாமை யைச் சற்றேனும் நம்பாத மக்கள் அடையும் எமதண் டனை பற்பல என்பதையும் விரித்துக்காட்டுகிறது.

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்**

**விரிவுரை:—** ஒருவன் வஞ்சகம் பொருந்திய பொய்யொழுக்கத்துடன் நடப்பானாகில் அவனுள்ளிருக்கும் பஞ்ச பூதங்களும் சிரிக்கும் என்பதாம்.

*அதாவது:—* மக்கள், காமம் குரோதம் லோபம் என்னும் தீய குணமுடையவர்களாக இருப்பின் தம் உடம்போடு கலந்து நிற்கின்ற பஞ்சபூதங்களும் அத்தீய குணத்தால் தம்முள்ளேயே சிரிக்கும். அத்தகைய அறியாமையுடன் வாழ்ந்திடாது, பஞ்ச பூதமென்னும் பஞ்சேந்திரியங்களையும் தம்மறிவுக்குள்ளாகவே அடக்கிக்கொண்டு உலகிற்கு ஒப்பற்றவைகளை நீக்கி ஒப்பான காரியங்களைச் செவ்வனே செய்வதில் தம்முள்ளிருக்கும் பஞ்ச பூதங்களைச் சாக்ஷியாகக் கொண்டு உத்தமனாக வாழ்தலே வாழ்வாகும். அஃதில்லா வாழ்வு தாழ்வே எனப்படுகிறது.

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்**

**விரிவுரை:**— பழிபாவத்துக்குப்பயந்து நியாயவழியில் பொருளைத்தேடி தன் இல்லம் நோக்கி வரும் விருந்தினர்களுடன் பங்கிட்டு உண்ணும் இல்வாழ்வான் சந்ததியானது எக்காலத்தும் குறைவுபடாது என்பதாம்.

*அதாவது:*— பழிபாவத்திற்குக் காரணமில்லாது உண்மையான துறையில் சம்பாதிப்பதே தமக்குகந்த பொருளாகும். அத்தகைய பொருளால் அடையும் தருமமே தன்னையும் தன்சந்ததியாரையும் சேர்ந்த புண்ணியமாகும். அஃதில்லாது தீய வழியால் வந்த பிறன் பொருளைக்கொண்டு பங்கிட்டு உண்ணுதலில் விசேஷம், தருமமானது பிறனுகிய பொருளுடையோனைச் சேர்ந்து அதன் பாவம் மட்டும் தன்னை அடைந்து தன் சந்ததியையும் அழிக்குமாதலால் அத்தகைய பெரும் தீய பழிபாவத்திற்குப் போய்ச் சேராது மக்கள் சிந்தித்து புண்ணிய வழியில் ஜீவியத்தை நடத்த எடுத்துச் சொல்லுகிறது.

**அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்**

**விரிவுரை:—** குறைந்து போகும் தன்மையுள்ள செல்வத்தைக் குறையாதிருக்கச் செய்துகொள்ள விரும்பும் மக்கள் பேராசையால் பிறருடைய பொருளைக்கொண்டு இன்னமும் அதிகமாக்கிவிடலா மென்று எண்ணுதிருத்தலேயாகும் என்பதாம்.

அதாவது:— தனக்குக் கிடைத்துள்ளவரைக்கும் பரமதிருப்தி அடைந்து நல்லவழியில் அநுபவித்து வாழ்வதே தமக்குள்ளதைக் காப்பாற்றிக்கொண்டவா களாவர். அஃதன்றி பின்னும் சேர்க்கவேண்டுமென்ற பேராசையே மென்மேலும் மனதில் வைத்துக்கொண்டு பிறரிடமுள்ளதையும் தந்திரமாக அடைய முறையற்ற செய்கைகளால் நினைத்துப்பார்ப்பதில் பெரும் குற்ற முண்டாகி அத்தகைய குற்றத்தால் ஏற்கனவே தனக் குள்ள பொருளையும் இழப்பதாக நேரிடுவதால், பெரும் பேராசையில் மக்கள் மனத்தைச் செலுத்தாமல் "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்னும் ஆன்றோர் அமுதமொழிக்கிணங்கி வாழ மக்களை உபதேசிக்கிறது.

**எச்சமென்று என்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்**

**விரிவுரை:—** *ஒருபொருளும் கொடுத்து ஒருவரா லும் அறியப்படாதவன் இறந்தபின் எதை நினைப்பானோ என்பதாம்.*

*அதாவது:— தன் அறியாமையால் ஒருவருக்கும் யாதொன்றும் கொடுக்கத் துணியாதவனாகி எவரையும் விரும்பாமல் யாவராலும் இச்சிக்கப்படாதவனாகயிருந் துவரின் அவன் இறந்தபின் தன் முடிவைப்பற்றி எவ்விதம் நினைப்பானோ எதைமுடிப்பானோ எத்தகைய ஜென்மம் விரும்பியவனாவானோ என்பதால் அத்தகைய மக்களின் அறியாமையை எடுத்துக்காட்டு கிறது.*

**இணர்ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்ற**
**உணர விரித்துரையா தார்**

**விரிவுரை:—** கற்ற நூல்களைப் பிறரும் அறியும் வண்ணமாக விரித்துச் சொல்லாதவர்கள் வாசனையில்லா மலருக்கு ஒப்பாவார்கள் என்பதாம்.

*அதாவது:—* மக்கள் தம் அறிவு தீக்ஷண்யத்தால் கற்ற நல்லவைகளைப் பலருக்கும் பயன்படுமாறு விரித்து உரைக்கவோ வெளிப்படுத்தவோ கடமையாகக் கொள்ளல் வேண்டும். அவ்வாறன்றி அதனை அலக்ஷியமாக நினைத்திடும் மக்கள் கொத்தினிடத்தே புஷ்பம் எவ்வளவு அழகாகப் பூத்திருப்பினும் அதற்கு வாசனை இல்லையேல் விரும்பப்படமாட்டாது போல அத்தகைய மக்கள் மணமற்ற பூவுக்கு ஒப்பாகி நன்கு மதிக்கப் படமாட்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

**ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு**

**விரிவுரை:—** உறுதியான சொற்களும் அச்சொற்களைப்போல் தவறாது காப்பாற்றிக்கொள்வதுமே பெருமையாகும். அஃதின்றேல் தமக்கும் தம் செல்வத்திற்கும் கேடுவரும் என்பதாம்.

*அதாவது:—* செல்வத்துக்கு ஏதுவாகிய நற்சொற்களும் அச்சொற்களைப்போல் நடத்தலுமே தனக்குப் பெருமை. பிறரிடம் பேசும் உறுதியான சொற்களும் அவ்வுறுதியான சொற்களைப்போல் காப்பாற்றிக்கொள்ளலுமே தன் செல்வத்திற்கும் பெருமை. ஆகவே எக்காரியத்திலும் எத்தகைய சொற்களிலும் கிஞ்சித்தேனும் சோர்வு இல்லாமல் வாழ்தலே பெரும்பாடான வாழ்வாகும். அவ்விதமின்றி தந்திரமந்திரமாகக் காரியமாகும் வரை அபிநயமாகப் பேசிவிட்டுப் பின் அலக்ஷியமாக நினைத்து வாழும் மக்களின் அவலக்ஷணத்தையும் அதனல் அடையும் கெடுதல்களையும் விரித்துக் காட்டுகிறது.

## நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
## ஒட்டாரை ஒட்டிக் கொளல்

**விரிவுரை:—** சிநேகம் உள்ளவருக்கு நல்லவைகள் செய்வதைக் காட்டிலும் தனக்குப் பகைவராய் உள்ள விரோதிகளுடன் விரைந்து சிநேகமாக்கிக்கொள்ளலே மிகவும் சிறந்தது என்பதாம்.

*அதாவது:—* மக்கள் ஒருவரிடமும் விரோத பாவனையின்றி சிநேகத்தன்மையிலேயே வாழவேண்டும். காலவித்தியாசத்தால் தமக்குள் பகை நேரிடினும் அப்பகையை வளரவிடாது விரைவில் அதனை மறந்து ஒன்றுபட்டு வாழ்தலே அறிவுள்ள மக்களின் லக்ஷணமாகும். மக்களின் உயர்ச்சிக்குப் பலருடைய அன்பான சொற்களே அஸ்திவாரக் கற்களாகத் தாங்கி நிற்பதால் அதைப்பெறுவதே மக்கள் உலகில் பெற்ற பெரும் பாக்கியமாகும். எனவே கண்ணுற்றுப் பார்க்கும் எவரும் தம்மை விரோதமாக நினைக்காது யாவருக்கும் இனிமைப்பட நடந்துகொள்ளுபவர்களே இவ்வுலகில் பெரும் கீர்த்தியும் புகழும் அடைந்தவர்களாவர் என்பதைக் காட்டுகிறது.

**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்-**
**வரையான்**
**பெண்மை நயவாமை நன்று**

**விரிவுரை:—** தருமம் முதலான சத்கருமங்கள் செய்யாதவனாய் குற்றமே செய்து சுத்தபாவியாக இருப்பினும் பிறன் மனைவியைப் பார்த்து விரும்பாமையே புண்ணியமும் நன்மையும் செய்தவன் ஆவான் என்பதாம்.

அதாவது:— எத்தகைய குற்றங்களிலும் மேலான குற்றம் பிறன் மனைவியை இச்சிப்பதேயாகும். மக்கள் எவ்வித சத்கரும அனுஷ்டானங்களைச் செய்திடினும் பிறன் மனைவியை விரும்பும் குற்றம் தம்மிடம் குடிகொண்டிருப்பின் அச் சத்கைங்கர்யங்கள் யாவும் வியர்த்தமாகி நரக துன்பமே தம்மை வந்தடைவதால் இதை விடக் கேவலமான குற்றம் உலகிலே இல்லை என்பதைக் காட்டுகிறது.

**உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்**
**போஒய்ப் புறமே படும்**

**விரிவுரை:—** சூதையே விரும்பியுள்ள மக்களின் பொருளும் அப்பொருள் வந்துசேரும் வழியும் தம் பகைவரிடம் போய்ச்சேரும் என்பதாம்.

*அதாவது:—* சூதையே தொழிலாகக்கொண்டுள்ளவர்களின் செல்வமும் அச்செல்வம் வரும் மார்க்கமும் தம்முடைய பகைவரிடம் சென்று தம்மை வறியவராக்கித் திண்டாட்டத்தில் வந்தடையச் செய்யும். எனவே தீக்குச்சி ஒன்று தான் என்று தெரியாமல் எடுத்திடினும் அது குற்றமே எனப்படுவதுபோல வேடிக்கையாக நினைத்து ஒரு காசு வைத்து ஆடினும் அது நாளடைவில் முற்றி பெரும் வினையாக வந்து முடியுமென்பதை விளக்கிக் காட்டுகிறது.

## கையறி யாமை உடைத்து பொருள்கொடுத்து மெய்யறி யாமை கொளல்

**விரிவுரை:—** மெய்ப்பொருளைக் கொடுத்து பொய்ப் பொருளைக் சொள்வதுபோல் வெட்கமும் கேவலமு மாகிய கள்ளைக் குடித்து வாழுவது அறிவில்லாமையே யாகும் என்பதாம்.

அதாவது:— அறிவுடையோர் விலைகொடுத்து ஒன்றைக்கொள்ள வேண்டுமாயின் தீயவைகொள்ள மாட்டார். அறிவில்லாதவர்களே தம் மெய் அறிவு கெடுதல் பொருட்டுக் கள்ளை விரும்புவதாகும். எனவே தன்னையும் தன்குடும்பத்தினரையும் வருந்தச் செய்யும் கள்ளைப் பிற இனத்தவர்களின் முன்பாக உண்டு வாழ்வது மூடத்தனம் என்பதை உணர்ந்து அதிலிருந்து விலகி உலக உண்மையை மறக்கச்செய்யும் கள்ளை விரும்பாது வாழ மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறது.

ஓம் கணபதி துணை.

# கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை

**விரிவுரை:**—கடவுள் பாதங்களைத் தினம் வணங்காத மக்கள் தம் உறுப்புக்களினுல் எவ்வித பயனும் அடைந்ததாக ஏற்படாது என்பதாம்.

*அதாவது:*— கடவுள் உலகைப் படைத்துப் பற்பல ஜீவராசிகளையும் உண்டாக்கி எல்லா உயிர்களையும்விட உயர்வானது மானிட ஜென்மமென உலகில் ஏற்படுத்தி நன்மை தீமையை ஆராய்ந்து தெரிந்து கொள்ளப் பகுத்தறிவும் கொடுத்த பெரும் வள்ளலான கடவுளைத் தினம் கண்களால் கண்டுத் தலையால் வணங்கி நாக்கால் வாழ்த்தி அறிவால் நினைக்காத மானிட உறுப்புக்களால் என்ன பயன் பெற்றவர்களாவர். ஆகவே மக்கள் தம் உடம்பின் காரிய காரணமறிந்து கடவுளின் மெய்யான வழியை மறவாது, துர் நடத்தையான பாவவழியில் சென்று மானிட அறிவைப் பறிகொடுத்து விடாமல் புண்ணியத்துக்கு ஏதுவாக உறுப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு மேற்பதவியை அடைந்து புனிதர்களாக மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

## அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
## என்போடு இயைந்த தொடர்பு

**விரிவுரை:**—மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்துவதற்கு வந்த பயன் என்பர் என்பதாம்.

*அதாவது:*— பெருதற்கரிய இம்மானிடப் பிறவியில் வந்துள்ளது மக்கள் ஒவ்வொருவரும் தாம் உலகில் தோன்றியுள்ளதின் நோக்கமென்ன, எதற்காக வந்துள்ளோம், எதைச் செய்வோமென்றெல்லாம் உணரவும், அன்பு என்னும் ஆசையால் தம்மைப்போன்ற பிற மக்களையும், பிற ஜந்துக்களையும் அறிந்துகொள்ளவுமே யாகும். எனவே, புகைவண்டி இழுத்துச் செல்ல தண்டவாளப்பாதை எவ்வளவு அவசியமோ, அதே போன்று, மக்களாய்ப் பிறந்து வந்துள்ளவர்கள் மேற் பதவியை அடைய அன்பு என்னும் கருணை வழியிற் சென்றால்தான் முடியுமென்பதைக் காட்டுகிறது.

**கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்**
**உண்மை நிலக்குப் பொறை**

**விரிவுரை:**—உலகம் தாக்ஷிண்யத்திலே நடப்பதாகிறது. அவ்விதமில்லாதவர் பூமிக்குப் பாரமாவர் என்பதாம்.

*அதாவது:*— உலகில் மானிடராய்ப் பிறந்து வந்துள்ள மக்கள் ஒருவரை ஒருவர் உலக நடையில் உபகாரம் செய்தல், காப்பாற்றுதல், பிழை பொருத்தல் இத்தியாதி குணங்களால் தாக்ஷண்யப்படுவதே உலக உண்மையைக் கண்டு களிக்கும் கண்களாகும். அவ்வாறு மானிடப் பிறவிக்கு இயற்கையாக அமைந்துள்ள தாக்ஷண்ய குணங்களில்லா மக்கள் தோற்றத்தில் மானிடர்களாகத் தோன்றினும் உண்மையில் மானிடர்களல்லர் என்பதையும், அவ்வித மக்கள் தம் புண்ணியத்தால் அடைந்த சரீரத்தையும் பாழாக்கிக்கொண்டு பாவத்தைத் தேடவே வந்துள்ளவர்களாகிப் பூமாதேவிக்கும் வீண் பாரம் சுமத்துகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

**கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதுஆக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்**

**விரிவுரை:**—செல்வம் நெடுங்காலம் தம்மிடமிருந்து நீங்காதிருக்க விரும்பும் மக்கள் தன்னிலும் மெலியவர் கள் குற்றத்தைப் பொறுத்து மெலிய தண்டனையாகச் செய்வதும், அவர்களிடம் அன்பு மிகுந்த தாக்ஷண்யம் கொள்வதுமாக இருத்தலே என்பதாம்.

அதாவது:— புறண்டுவரும் வெள்ளமும் பள்ளத் தாக்கில் விழுந்து தேங்குவதுபோல, பள்ளத்திற்கு உவமையான சாந்த புத்தியைக் கொண்டுள்ள மக்க ளிடம் கருணை மூர்த்தியின் கிருபா சமுத்திரமான செல்வம் தானுகப் புறண்டு வந்தடையும். அன்றி மக்களின் புத்தி மேடுபோலிருப்பின், கருணை என் னும் வெள்ளம் வந்து தேங்குவதற்கு இயலாது போவ தால், வெள்ளம் விரும்பின் பள்ளம் தேவை போல, அன்பாகிய தாக்ஷண்யம் கொண்டு வாழ்வதாகில் செல் வம் தானுக வந்தடையுமென்றும், அடைந்த செல்வமும் தம்மைவிட்டு நீங்காதிருக்கும் என்பதைக் காட்டுகிறது.

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று**

**விரிவுரை:**—ஆயிரம் விதமான யாகங்கள் செய்து பல்லாயிரம்கோடி மக்களுக்குத் தினம் தவருது அன்ன மளிப்பதைவிட எந்த ஒரு உயிரையும் கொன்ருே அல்லது எவராலாவது கொல்லப்பட்ட உடலையோ புண்ணென்று எண்ணிப் புலாலை உண்ணுது இருத்தலே உயர்ந்த யாகமும் சிறந்த தருமமுமாகும் என்பதாம்.

*அதாவது:*— பலவகைக் குற்றங்களிலும் உயிர்க் கொலைக் குற்றமே சண்டாளத்தனம் நிறைந்த தன்மையுடையோன் செய்யும் கொடூரமான குற்றம். கொலைக்குக்காரணமாய் நிற்பவன் புலாலை உண்பவனே ஆதலால் எவ்வித குற்றத்திற்கும் பின்னொரு காலத்தில் பரிகாரம் தேடி நிவர்த்தி செய்துகொள்ளலாம், ஆனல் இத் தீய குற்றம் மறுஜென்மத்திலும் விடாது அதற்குச் சரியான தண்டனை தப்பாது வந்தடைந்து நரகவேதனையில் அழுந்தித் துன்பப்பட்டே தீரவேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகிறது.

**நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்**

**விரிவுரை:**—நடுவு நிலைமை என்னும் நியாயமில்லாது பிறர் பொருளை இச்சித்தால் தன் குடியைக் கெடுத்துப் பல குற்றத்தையும் கொடுக்கும் என்பதாம்.

அதாவது:— நியாயமான வழியில் நடு நிலைமை கொண்டதாக அதாவது எவருக்கும் சாதக பாதகமில்லாது உண்மையாக இருப்பின் அதுவே தருமமான மார்க்கத்தில் தன்னை வந்தடையும் செல்வமாகும். அன்றி பிறரை ஏமாற்றி மயக்கி டாம்பீகமாகப் பேசி அக்கிரமமாகப் பிறரிடமிருந்து பொருளை அடைவது பெரும் மோசமான செய்கையேயாகும். அவற்றால் வந்த செல்வம் தன் குடியையும் கெடுத்துப் பின்னும் தனக்குப் பல இடையூறுகளைத் தரும் காரியங்களுக்கே உபயோகப்பட்டுப் பல குற்றங்களையும் கொடுக்கும் என்பதைக் காட்டுகிறது.

**பயனில் பல்லார்முன் சொல்லல் நயனில**
**நட்டார்கண் செய்தலின் தீது**

**விரிவுரை:**—அறிவுடையோர் பலர் முன் பயனற்ற சொற்களைப் பெருமையாகச் சொல்லுதல் சிநேகரிடம் செய்யும் தீமையைவிடத் தீது என்பதாம்.

*அதாவது:*— பெரும்பாலான மக்கள் உபயோக மற்ற காரியத்திற்கும் பெருமை பாராட்டிப் பேசுதல் நீதியில்லாதவர்களென்றும், அவற்றால் தம் அறிவைத் தாமே கேவலப்படுத்திக் கொண்டதுபோலாகிறது மன்னியில் மலை போன்ற விஷயத்தையும் கடுகளவில் சிறிதாக விளங்கச் சொல்வதே உயர்ந்த அறிவாளிக ளின் லக்ஷணமாயிருக்க, பிரயோஜனமற்ற முறையில் சொற்களை அகாரணமாய்ப் பிரயோகிக்கும் மக்களின் அற்பத்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

**நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்**

**விரிவுரை:**—நிலத்தின் இயல்பை அதனிடத்தே முளைத்த முளை காட்டும். அதேபோல் நற்குலத்தில் பிறந்தவர் இயல்பை அவரிடம் உதிக்கும் வாய்மொழி காட்டும் என்பதாம்.

அதாவது:— நிலத்தின் தார தன்மை விளைவின் பயனால் (நயமும், மிதமும், கூடுதலும், குறைவும்) அறிய முடிகிறதுபோல, நற்குடியில் பிறந்த மக்களின் தன்மை இனிய சொற்களாலும், அன்பு மிகுந்த நடத்தையாலும், இரக்கச் சிந்தனையாலும் கண்டறியலாம். எனவே அத்தகைய நடத்தையில்லா மக்கள் நற்குடியில் பிறந்தவர்களல்லர், இழிகுலத்தோரைச் சேர்ந்தவர்களேயாவரென்பதும், குணத்தாலே குலத்தைப் பெறலாமென்பதின் நிச்சயத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது**

**விரிவுரை:**—*தீயிற்கிடந்து நித்திரை செய்யவும் மந்திர தந்திர மருந்துகளால் ஒருவனுக்குக் கூடும். ஆனால் வறுமை வந்தடைந்துவிடின் அவ்வறுமை என்னும் தீயில் நித்திரை செய்ய எவ்வகையாலும் முடியாது என்பதாம்.*

*அதாவது:— வறுமை என்பது மக்கள் பூர்வத்தில் செய்த தீவினையே. நல்வினை அடைந்து வந்தவர்கள் சுகபோக பாக்கியங்கள் அநுபவிப்பதுபோலவே தீவினை என்னும் வறுமையையும் மக்கள் ஒப்புக்கொண்டு பரிபூரணமாக அநுபவிக்கக் கடமைப்பட்டவர்களே. ஆகையால் மக்கள் பூர்வம் செய்த தீவினையால் இக்காலத்தில் பிரத்தியக்ஷமாக வந்துள்ள தண்டனையை நினைந்துருகி, நற்காரியங்களில் நம்பிக்கை வைத்து, அனுஷ்டித்து, நல்வினையைப் பெற்றுப் புண்ணிய சீலர்களாகும்படி மக்களை வற்புறுத்துகிறது*

**துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை**

**விரிவுரை:**—*துன்பமானது மிக வரினும், தளராமல் முடிவில் சுகத்தைத்தருகின்ற தொழிலை வலிமையாகச் செய்யவேண்டும் என்பதாம்.*

*அதாவது:*— *முயற்சியினாலே எவ்வித துன்பம் வரினும், பிறருக்குப் பயன் தராத தொழிலைச் செய்யாமல், பிற மக்களுக்கும் பயன் தரக்கூடியவிதத்தில் இன்பம் தரும் தொழிலையே செய்யவேண்டும். அவ்வித நன்னோக்க முயற்சியானது இறுதியில் நிலையான சுகத்தையே தரவல்லதால் அதை வலிமையுடையதாய்ச் செய்யவேண்டுமென்பதும், அஃதில்லாது சுயநலங் கருதிச் செய்யும் தொழில் முறையின் அறியாத்தனமும், அவ்வித குணத்தால் அத் தொழில் நிஷ்பிரயோஜனமும் கஷ்ட நஷ்டமும் நிச்சயமாய் உண்டாக்கும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.*

**பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு**

**விரிவுரை:**—பிறவிக்குக் காரணமாயுள்ள அஞ்ஞானத்தை நீக்கி, மோக்ஷத்துக்கு ஏதுவாகிய உண்மைப் பொருளைக் காண்பதே அறிவின் சிறந்த வேலையாகும் என்பதாம்.

அதாவது:—எல்லா வகையிலும் சிறந்தது மோக்ஷம். இப்பதவியே எக்காலமும் பரிசுத்தமாகவும், நித்தியமாகவும், ஒரே தன்மையாகவும், முதற்பொருளாகவும் இருத்தலால் செம்பொருள் எனப்படும். மரண காலத்தில் நினைக்கிறபடி பிறவி வருமென்பதால் மோக்ஷமடைவோர்க்கு உண்மைப் பொருளோடு ஒற்றுமையுறக் கடவுளை இடைவிடாது நினைத்தலே அதை அடையும் வழியாகும். எனவே செல்வம் பெற்றவன் அதை இழக்கும்படி ஏற்படின் எவ்விதம் வேதனைப்படுவானோ அதேபோல் இம்மானிடப்பிறவி லாபகரமான செல்வம் போன்றுள்ளதால் மக்கள் இப்பதவியை நஷ்டத்துக்கு ஆசை கொள்ளாது லாபம் என்னும் மேற் பதவியை அடைவதற்கும் ஏமாந்துவிடாது இருக்க மயக்கமென்னும் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பியதுபோலாகிறது.

**கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்து**
**நல்லார் அவைஅஞ்சு பவர்**

**விரிவுரை:**—*சன்மார்க்க நூல்களைக்கற்று அவைக ளாலே பயன் அறிந்திருந்தும் சபையில் சொல்ல அஞ்சுபவர்கள் கல்லாதவரினும் கீழ்ப்பட்டவராவர் என்பதாம்.*

*அதாவது:— கற்றறிந்த அறிவாளிகள் தம் உள்ளத் திலேயே வைத்துக்கொள்ளாமல், தாம் கற்றதை எல்லா மக்களுக்கும் பயன் தருமாறு அஞ்சாது வெளிப் படுத்துவதே கற்றவர்களின் பெருமைக் குணமாகும். அவ்விதமில்லாத மக்களை எழுத்தறிவு இல்லாத கீழ் மக்களோடு ஒப்பிடலாகுமன்னியில் இவ்வித அறியாமை தாம் கற்றவைகளையும் பெருமையின்றி மறதியாக்கிவிடு மென்பதை எடுத்துக் காட்டுகிறது.*

ஓம் கணபதி துணை.

# பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார்

**விரிவுரை:—** கடவுள் பாதங்களைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக் கடப்பர். சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள் என்பதாம்.

*அதாவது:—* மிகுந்த புண்ணியத்தால் அடையப் பெற்றது இம்மானிடப்பிறவி. பல்லாயிரம் கோடி பிறவிகளிலும் முதன்மைவகித்த உத்தமமான பிறவி இதுவே. உண்மைப்பொருளை அடைவதற்கு அறிய வல்ல சக்தி வாய்ந்ததும் இப்பிறவிக்கே. இம்மானிடப் பிறவிக்கு அடுத்தது மேல் உலகப் பதவியே. ஆகையால் இப்பிறவியை நழுவவிட்டால் பின்னும் இம் மானிடப் பிறவியையே அடைவோமா என்பதைச் சற்று சிந்தித்து மேற்பதவியை யடைய வழி தேட வேண்டும். காட்டுப் பயணத்துக்குத் தன் தாயார் கட்டிக் கொடுக்கிற கட்டிச் சாதம் போல் மானிட ஜென்மம் கடைத்தேறுவதர்க்கு உண்மைத் தந்தையான கடவுள் அறிவு என்னும் பொருளைக் கொடுத்தனுப்பியிருக்கிறா. எனவே மேற் சொன்னவற்றைக் கவனித்து அவரை நினைந்துருகுகிறவாகளே பிறவித்

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு**

**விரிவுரை:—** அன்பு இல்லாத மக்கள் எல்லாப் பொருளும் தமக்கே உரியன என்பர். அன்புடைய மக்கள் தன் சதையாலும் எலும்பாலும் பிறர்க்குப் பயன்படுவர் என்பதாம்.

அதாவது:— பிறரிடம் அன்பு இல்லா மக்கள் எல்லாம் தம் பிரயத்தனத்தால் அடைந்ததென்னும் மனப் பான்மையைக்கொண்டு யாவர்க்கும் பயன்படமாட்டார் கள். அவ்விதமின்றி அன்புகொண்டொழுகும் மக்கள் அனைவற்றும் ஆண்டவன் செயலால் வந்து அடைந்த தென்னும் உண்மையையே மேற்கொண்டு பிறரின் உபகாரத்திற்குத் தன்னிடமுள்ள எதையும் கொடுத்து உதவுவதோடு தன் சரீரத்தையும் அதனுள் எலும்பை யும்கூட பிறர்க்கு உபயோகப்படும்படி நடந்துகொள்வர் என்பதைக் காட்டுகிறது.

---

முன்பக்கத் தொடர்ச்சி.

துன்பத்தை நீக்கிக்கொண்டு சஞ்சலமற்று நித்திய மாகவும் ஜோதி சொரூபமாகவும் தோன்றலாம். அஃ தில்லா மக்கள் பிறவி என்னும் வேதனையிலே சுழன்று சுழன்று துன்புறுவர் என்பதை விளக்கிக் காட்டுகிறது.

**வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
**ஆண்டும் அஃதொப்பது இல்**

**விரிவுரை:—** எதையும் இச்சியாமைக்கு ஒப்பான செல்வம் இவ்வுலகத்திலேயும், மோக்ஷந்தரும் அவ்வுலகத்திலேயும் இல்லை என்பதாம்.

*அதாவது:—* ஒரு பொருளையும் விரும்பாதிருக்கும் தன்மையே உயர்ந்த லக்ஷியமான செல்வம். பொருட் செல்வம் மேலும் மேலும் நோக்கின் கீழ் தன்மைக்கே வருதலால் எல்லாவற்றிற்கும் மேன்மையான வேண்டாமையென்னும் செல்வத்தைவிட வேறொன்று காணப்படுகிற இவ்வுலகத்திலேயும் இல்லை, கேட்கப்படுகிற அவ்வுலகத்திலேயுமில்லை யென்பதையும் இவ் வேண்டாமையே பிறவாமைக்கு வழி காட்டியாகும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

**வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்**

**விரிவுரை:—** *விருந்தினரைக் காப்பவனது* **விளை** *நிலம் தானே விளையும் என்பதாம்.*

*அதாவது:—* *தம் இல்லம் தேடிவரும் பந்துமித்திர மற்றுமுள்ள யாசகர்களை அன்புடன் உபசரித்து அவர்களை உண்பித்து மிகுதியை உண்ணும் ஒரு இல் வாழ்வான் விளை நிலத்திற்கு விதையும் இடுதல் வேண்டாம்; அந்நிலம் தானே விளைந்து மீறின பலனைத் தரும் என்பதும், நாம் பிறரைக் காப்பின் நம்மைக் கடவுள் காப்பார் என்பதற்கிணங்க, நற்குண நற்செய் கைகள் அனைவற்றிலும் கடவுள் அம்சம் நிறைந்துள்ள தால் அவ்வகையில் ஈடுபடும் மக்களுக்குக் கடவுள் உதவிபுரியக் காத்திருப்பார். அத்தகைய நற்சிந்தனை கொண்டுள்ள மக்களின் விளைநிலம் தம்முடைய பாது காப்பின்றிக் கடவுள் அனுக்கிரஹத்தால் எவ்வித பழுதும் நேரிடாமல் தானே விளைந்து குமியுமென் பதைக் காட்டுகிறது.*

## நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்-செய்யார்
## நோயின்மை வேண்டு பவர்

*விரிவுரை:—* தன் உயிர்க்குத் துன்பம் இல்லாமையை விரும்பின் பிற உயிர்க்கு எவ்விதத் துன்பமும் செய்யாதிருத்தலால் அடையலாம் என்பதாம்.

*அதாவது:—* துன்பப்படாமல் சுகம்பெற நினைக்கும் ஒருவன் தன்னால் பிற மக்களுக்கும், மற்றும் வாயில்லா உயிர்களுக்கும் எவ்விதத் துன்பமும் எத்தகையத் தீங்கும் நேரிடாது காப்பாற்றிக் கொள்ளுதலால் தான் இன்புற்று வாழலாமென்பதும், காருண்யமின்றிப் பிறரை இடையூறுகள் நினைப்பதும், தான் பிற உயிர்களை வதைக்காவிட்டாலும் பிறர் வதைக்கக் காரணஸ்தராக நிற்பதும் அது நாளடைவில் தன்னையே வந்து சுற்றிக்கொண்டு தன் பிராணனுக்கும் வேதனை தருமென்பதை எடுத்துக் காட்டுகிறது.

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்க மிலான் கண் உயர்வு**

**விரிவுரை:—** பொறாமையுள்ளவனிடத்துச் செல்வம் நிற்பது இல்லைபோல ஆச்சாரமில்லாதவனிடதது மேன்மை இல்லை என்பதாம்.

*அதாவது:—* பொறாமைக் குணம்கொண்டு வாழும் மக்களிடம் செல்வம் தங்கியிராமல் வறுமைப்படுத்திக் கொண்டிருக்கும். அதேபோன்று ஆச்சார அனுஷ்டானங்கள் இல்லா மக்களிடம் உயர்ச்சியும் மேன்மையும் தங்காது. எனவே ஆச்சாரம் என்பது கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் தூண்களுக்குச் சமானமாக இருக்கிறபடியால் மக்கள் அடையத்தகும் செல்வத்துள் அதுவும் ஓர் வகைச் செல்வம் என ஏற்படுகிறதால் அச்செல்வமென்னும் ஒழுக்கக் குணம் இல்லாவிடின் தனக்கும் தன் சுற்றத்தாருக்கும் உயர்ச்சியின்றிப் பின்னும் இழிகுலத்தை அடையச்செய்யு மென்பதைக் காட்டுகிறது.

**ஊருணி நீர் நிறைந்தற்றே உலகுஅவாம்**
**பேரறி வாளன் திரு**

**விரிவுரை:—** அறிவாளருடைய செல்வமானது ஊர் மக்கள் குடிக்கும் குளத்திலே நீர் நிறைந்தது போலாகும் என்பதாம்.

அதாவது:— தேச நலத்தையே நோக்கங்கொண்டு வாழும் மக்களுடைய செல்வமானது பாழ்படாமல் நெடுங்காலம் எல்லாருக்கும் வேண்டுமளவில் ஊர் நடுவில் இருக்கும் நிறை குளத்துத் தண்ணீர்போல் பயன்படுமென்பதையும், உபகாரத்தில் ஈடுபடும் செல்வமே ஊற்றுபோல் ஊறிக்கொண்டிருக்கு மென்பதின் உறுதியையும், இவ்வுண்மையறியாத மக்கள் பயன் இழந்து தன் செல்வத்தைத் தன் காலத்திலேயே பழுதாக்கிக் கொள்வார்களென்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

அறஞ் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்-
சொல்லும்
புன்மை யாற் காணப் படும்

**விரிவுரை:—** *தருமம் நல்லதென்று தன் வாயினால் சொல்லினும் புறங்கூறின் அவனது மனத்தில் தருமம் இல்லை என்று அறியப்படும் என்பதாம்.*

*அதாவது:—* வாயினால் நல்லவைகள் பேசினாலும் உண்மையில் அத்தன்மை தம்மிடம் இல்லையெனின் அறிவுடையோரல்லர் என்பதும், பிறரைப்பற்றி ஒருவர் இல்லாததை எடுத்துக் கூறுவது தருமமற்ற செய்கை யாகிறதால் தம்மால் பிறருக்கு இடையூறுகள் நேரி டாதபடி இருத்தலே அறிவுடைய மக்களின் தன்மை யாகும். அஃதில்லார் தருமததின் வகையறியாது வீண் வார்த்தைகள் பேசிக் காலம் கடத்தி வருபவர் களேயாவா. ஆகவே நல்லவற்றைப் புகழ்வதுபோல் அதற்கேற்ற நற்சிந்தனையும் தம்மிடம் குடிகொண் டிருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப்பு டைத்து**

**விரிவுரை:—** ஒருவன் ஆமையைப்போல் ஐம்புலன்களையும் அடக்க வல்லவனுகில் அவ்வல்லமை எழு பிறப்புகளிலும் உறுதியான நன்மையைத்தரும் என்பதாம்.

*அதாவது:—* ஆமை அறிவில்லா ஜந்துவாக இருந்தாலும் தனக்கு அவசியமில்லாக் காலத்தில் தன் அவயவங்களைத் தன் உடம்பினுள் அடக்கிக்கொள்வது போல், மக்கள், ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளைப் பாவம் தரும் செய்கையில் சேராதிருக்க அடக்கும் தன்மையுடன் காப்பாற்றிக்கொள்ளுதலே உயர்வை அடைந்தவர்களாவர். அத்தன்மையை இவ்வொரு பிறவியிலேயே அடைந்துவிடின் தன் எழு பிறவிக்கும் அப்பயன் தொடரும் எனப்படுவதால் அமைதி அடக்கம் ஒழுக்கம் கொண்டு வாழ்வதே மக்கள் மானிட ஜென்மம் எடுத்ததின் பயன் அடைந்தவர்களாவர் என்பதைக் காட்டுகிறது.

**பொறி யின்மை யார்க்கும் பழியன்றி அறிவறிந்து**
**ஆள்வினை யின்மை பழி**

**விரிவுரை:—** *விதியில்லாமை யாவர்க்கும் பழியாகாது. அறிய வேண்டியவைகளை அறிந்து முயற்சியுடனில்லாமையே பழியாம்.*

*அதாவது:— சோம்பலில் முழுகியவர்கள் முயற்சியில்லாக் குற்றத்தால் ஊழ்வினையின் பேரில் பழி சுமத்திக் காலம் கடத்தியே வருந்துகிறார்கள். செய்யத் தகுந்தவைகளை அறிந்து அவற்றைச் செய்துகொண்டு முயற்சி யுடனிருப்பவர்களே ஊழ்வினையை நீக்கிக் கொள்ளவல்லமை கொண்டவர்களாவர். எனவே சோம்பலைத்தன் அறியாமையால் தேடிக்கொள்வதே ஆகும் என்பதைக் காட்டுகிறது.*

காலத்தினுல் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

**விரிவுரை:—** ஒருவனுக்குச் சமயமறிந்து பிற யாவருடைய உதவியும் கிட்டாது ஆபத்தால் பரிதவிக்கும் தருணயில் ஒருவன் செய்யும் உதவியானது அளவில் மிகச் சிறிதாக இருந்தாலும் பயனில் இவ் உலகத்தைவிடப் பெரிது என்பதாம்.

அதாவது:— அளவில் மிகச் சிறிது என்பது ஏகதேசம் தாகத்தினுல் பரிதவித்து லோட்டா ஜலத்துக்கும் தேவையிருப்பதாக ஏற்படுகிறது. அத் தருவாயில் பிறரிடமிருந்து சிறிது தண்ணீர் பெற்று அதைப் பருகின க்ஷணத்தில் தம்மனது அடையும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. எனின், பின்னும் அதே ஜலம் குடம் குடமாகக்கிடைக்கப் பெற்றாலும் தம்மனது விரும்பாதுபோல சமயத்தில் அடைவதிலும் சமயமறிந்து செய்வதிலும் ஏற்படும் உயர்ந்த லக்ஷியத்தை விளக்கிக்காட்டி அத்தகையவிதத்தில் செய்யும் உதவிக்கு ஈடான பொருளே உலகத்திலில்லை என்பதற்குப் பதிலாக உலகத்தைவிடப்பெரிது என்பதாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று தேரின்
அருளாதான் செய்யும் அறம்

**விரிவுரை:—** கடவுள் கிருபையான அருள் இல்லாதவன் செய்யும் தருமத்தை நினைத்துப் பார்க்கின் அறிவு இல்லாதவன் ஞானம் பேசிய தன்மை போலாகும் என்பதாம்.

*அதாவது:—* அருளில்லாதவன் என்பதற்குப் பிற உயிர்களை அன்புகொண்டு அறிந்து கொள்ளாதவன் எனப்பொருள்படும். அன்பு இல்லையாயின் கடவுள் கிருபையை அடையச் சக்தியற்றவன் எனப்படுவதால் அத்தகைய அருளில்லா மக்கள் செய்யும் தருமங்கள் அனைவற்றும் ஞானம் இல்லாதவன் வேதாந்தம் பேசி வீண் வார்த்தைகள் ஆக்கிக்கொண்டது போலவேயாகும். எனவே தான் அன்பு என்னும் அமிர்தத்தைப் பருகிப் பிறருக்கும் அதனை வழங்குவதே உண்மையான தருமத்தைச் செய்தவனாவான். அஃதின்றேல் பார்வை குன்றிய தன் கண்ணைக் குணப்படுத்திக் கொள்ள இயலாதவன் பிறர் கண்ணுக்கு வைத்தியம் செய்யப்புகும் தன்மைபோலாகும் என்பதை விரித்துக் கூறுகிறது.